# சோதனையில் தேவ அங்கீகாரம்



சகரியா பூணன்

# சோதனையில்
# தேவ அங்கீகாரம்

சகரியா பூணன்

“உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி
ஜாக்கிரதையாயிரு” (2தீமோத்தேயு.2:15).

★ பத்தாம் பதிப்பு (2018)

அங்கீகாரம் நாடி . . .

1. தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் - 5
2. பிதாவுக்கு பிரியமாயிருத்தல் - 8
3. ஆதாம், ஏவாள் சோதிக்கப்படுதல் - 13
4. யோபு சோதிக்கப்படுதல் - 18
5. ஆபிரகாம் சோதிக்கப்படுதல் - 23
6. மோசே சோதிக்கப்படுதல் - 30
7. தாவீது சோதிக்கப்படுதல் - 36
8. எலிசாவும் கேயாசியும் சோதிக்கப்படுதல் - 42
9. பேதுருவும் யூதாசும் சோதிக்கப்படுதல் - 46
10. தேவ அங்கீகாரம் பெற்ற மீதியானவர்கள் - 50

சோதனையில் தேவ அங்கீகாரம் (Gaining God's Approval) -1990

Copyright - ZAC POONEN

இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக இப்புத்தகம் பதிப்புரிமையைப் பெற்றுள்ளது. ஆசிரியரின் அனுமதியில்லாமல், இச்செய்திகள் மொழி பெயர்க்கப்படவோ அல்லது அச்சிடப்படவோ கூடாது.

ஆசிரியர் முகவரி:
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

என்னையே நானும் நாள்தோறும்
நியாயந்தீர்த்து, குரு முன்சென்ற
புதிதும் ஜீவனுமான மார்க்கம் நடந்திட,
பேரொளி தந்து மெய்யருள் புரியும் தேவா!
உம்மைப்போல் மாறிட, உம் தூய்மை பெற்றிட
முழு நெஞ்சாய், உம் கிருபை
கெஞ்சி நிற்கின்றேன் தேவா!!

# 1



## தேவனுக்கு உண்மையுள்ளவர்கள்

*தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதல் என்பது ஒன்று; ஆனால் தேவனால் அங்கீகரிக்கப்படுதல் என்பதோ முற்றிலும் மாறான வேறொன்று!*

*வெளிப்படுத்தின விசேஷப்புத்தகம் தேவ ஆட்டுக்குட்டியானவரின் ஜெயத்தைப்பற்றியே பேசுகிறது. ஆனால், ஆட்டுக்குட்டியானவருக்கு, அவருடைய சீஷர்களைக் கொண்ட சேனை ஒன்று இருக்கிறதையும்,* **அவர்கள் மூலமாகவே** *அவர் தனது யுத்தத்தை நடத்தி ஜெயங்கொள்கிறார் என்றும் அங்கே நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சீஷர்களே அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாவார்கள் (வெளி.17:14). அழைக்கப்பட்டவர்கள் அநேகர்! தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்! ஆனால் உண்மையுள்ளவர்களோ இன்னும் வெகு சிலரே!! இவர்களே வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் ஜெயங்கொள்கிறவர்கள் என பத்து முறை சொல்லப்பட்டிருக்கிறார்கள். மாத்திரமல்ல, அநேக சூழ்நிலைகளில்* **அவரால் சோதிக்கப்பட்டு** *அவருடைய நற்சாட்சியைப் பெற்ற இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள்!!*

*இயேசுகிறிஸ்து பூமியில் இருந்தபோது அநேகர் அவரிடம் விசுவாசம் வைத்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோருக்கும் அவர் இணங்கவில்லை (யோவா.2:23,24). அவரிடம் விசுவாசம் வைத்த மிகப் பெரும்பான்மையானோர் தனக்கானதையே தேடினர் என்றும், தங்கள் சொந்த ஆசீர்வாதங்களுக்காகவே தன்னிடம் வந்தனர் என்றும் அவர் அறிவார். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் ஜெயம் கொண்டவர்களாயில்லை! ஏனெனில் தனக்கானவைகளைத் தேடுகிற*

ஒருவராகிலும் ஜெயம் கொண்டவர்களாய் இருக்கவே முடியாது!!

இஸ்ரவேலரின் சத்துருக்களை எதிர்க்க கிதியோன் ஒரு சேனையைத் திரட்டினபோது, அவனுடன் 32,000 இஸ்ரவேலர்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோரும் முழு இருதயத்துடன் இல்லை என்பதை தேவன் அறிவார். ஆதலால், தேவன் அவர்களை வடிகட்டி கழித்துவிட்டார். முதலாவது, பயப்படுகிறவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். அப்படியும் 10,000 பேர் மீதமிருந்தார்கள். அவர்கள் ஆற்றண்டை கொண்டு செல்லப்பட்டு சோதிக்கப்பட்டார்கள். அதில் 300 பேர் மட்டுமே சோதனையில் ஜெயம் பெற்று தேவனால் அங்கீகரிக்கப்பட்டார்கள். தங்கள் தாகத்தைத் தீர்க்கும்படி அந்த 10,000 பேர்கள் **ஆற்றில் தண்ணீர் குடித்தவிதம்,** கிதியோனின் சேனையில் இருப்பதற்கு தகுதியுடையவர்கள் யார்? என்பதைத் தேவன் தேர்ந்தெடுக்கும் முறையாயிற்று! தாங்கள் சோதிக்கப்படுகிறோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேயில்லை!! 9,700 பேர்கள் சத்துருவைப் பற்றிய எல்லாவற்றையும் மறந்து தங்கள் தாகத்தை திருப்தியாக்க முழங்கால் படியிட்டனர். 300 பேர்கள் மாத்திரம் நின்றவண்ணம், ஜாக்கிரதையாய் குவிந்த கைகளால் தண்ணீரைக் குடித்தனர்.

*தேவன் நம்மை சோதிப்பது, அனுதின வாழ்வில் சாதாரண விஷயங்களில்தான்! பணம்; உலக மரியாதை; லௌகீக சுகங்கள் போன்றவற்றைப் பற்றிய நமது மனப்பான்மையில்தான்!*

நாமும்கூட கிதியோனின் சேனையில் இருந்தவர்களைப்போல, தேவன் நம்மை சோதித்தறிகிறார் என்பதை அநேக முறை உணர்வதில்லை. "உலகக் கவலைகளால்" பாரமடையாதபடிக்கு இயேசுகிறிஸ்து நம்மை எச்சரித்துள்ளார் (லூக்கா.21:34). கொரிந்து பட்டண கிறிஸ்தவர்களுக்கு பவுல் ஆலோசனை சொல்லும்பொழுது "மனைவிகளுள்ளவர்கள் மனைவிகள் இல்லாதவர்கள் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவிக்காதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும்" இருக்கவேண்டும் என்கிறார் (1கொரி. 7:29-31). நமது தாகத்தை நாம் தீர்க்கலாம்.... ஆனால், கரங்களைக் குவித்து குறைந்தபட்ச தேவை எவ்வளவோ அவ்வளவே நாம் குடிக்க வேண்டும்! நம்முடைய மனம் பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே சார்ந்திருக்க வேண்டுமானால் நமக்குண்டான எல்லாவற்றையும் நாம் வெறுக்க வேண்டும்!

தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகிறபோது "தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் தன்னை சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கும்படி **பிழைப்புக்கடுத்த அலுவல்களில்** சிக்கிக் கொள்ள மாட்டான்" (2தீமோ.2:4) என்று சொல்லி உபதேசிக்கிறார்.

*தீமோத்தேயுவுக்கு பவுல், எப்படி இரட்சிக்கப்படுவது என்று சொல்லவில்லை. மாறாக, எப்படி கிறிஸ்துவுக்கு பயனுள்ள சேவகனாய் இருப்பது? தேவனுக்கு முன் உத்தம ஊழியக்காரனாய் இருப்பது? (2தீமோ.2:5) என்றே சொல்கிறார். பவுலும்கூட உண்மையுள்ளவராய் விளங்கினபடியால்தான் (1 தீமோத்தேயு. 1:14) கிறிஸ்தவ ஊழியத்திற்கு கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டார். பவுல் அழைக்கப்பட்டும் தெரிந்து கொள்ளப்பட்டும்* **மேலும் உண்மையுள்ளவர்களுமான** *கூட்டத்தில் ஒருவர்! தீமோத்தேயும்கூட அந்த எண்ணிக்கையில் இருக்க பவுல் வாஞ்சித்தார்!!*

*பவுல் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னால் சோதிக்கப்பட்டார். நாமும் இப்பொழுது சோதிக்கப்படுகிறோம். தேவன் சோதித்தறியாமல் தம்மை யாருக்கும் ஒப்புவிப்பதில்லை. தேவனுடைய வார்த்தையில் பலதரப்பட்ட மனிதர்கள் சோதிக்கப்பட்டதும், அதில் சிலர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதும்! சிலர் புறக்கணிக்கப்பட்டதும்! சொல்லப் பட்டிருக்கிறது. அவை நமக்கு திருஷ்டாந்தமாய் எழுதப்பட்டிருக்கிற படியால், அவை நமக்கு விலையேறப்பெற்றதாய் இருக்கிறது!!*

# 2



## பிதாவுக்கு பிரியமாயிருத்தல்

*புதிய ஏற்பாட்டில், பிதா மிகவும் பிரியமாயிருந்த ஒருவரைப் பற்றியும், மற்றும் தேவன் பிரியமாயிராத ஒரு மக்கள் கூட்டத்தைப் பற்றியும் நாம் வாசிக்கிறோம். இந்த வேறுபாட்டை உற்று நோக்குவது மிகவும் சுவாரஸ்ய மானதாய் இருக்கிறது.*

*அவிசுவாசத்தினால் வனாந்தரத்தில் மரித்துப்போன 6,00,000 இஸ்ரவேலரைப் பற்றி "தேவன் அவர்களில் பிரியமாயிருந்ததில்லை" (1கொரிந்தியர்.10:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த இஸ்ரவேலர்கள் ஆட்டுக் குட்டியின் இரத்தத்தால் எகிப்திலிருந்து மீட்கப்பட்டு (கிறிஸ்துவின் மூலம் நாம் மீட்கப்படுதலுக்கு அடை யாளம்), சிவந்த சமுத்திரத்திலும் மேகத்தினூடாயும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் (1கொரி.10:2- நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பெறும் ஞானஸ் நானத்திற்கு அடையாளம்). இருப்பினும், அவர்களில்* தேவன் **பிரியமாயிருந்ததில்லை!**

*ஆனாலும் அவர்களுக்கு தேவன் நல்லவராகவே இருந்தார்! அவர்களுடைய சரீரத் தேவைகளை இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் சந்தித்து (உபா. 8:4) அவர்களுடைய எல்லா நோய்களையும் குணமாக்கி (சங்.105:37), மேலும் பல அற்புதங்களையும் அவர்களுக்கு செய்தார். உண்மையில், உலக சரித்திரத்தில் "தேவன் 40 வருடங்களாய் கோபமாயிருந்த" அந்த அவிசுவாச முள்ள இஸ்ரவேலர்களுக்கு செய்ததுபோல, அநேக அற்புதங்களை வேறு எந்த ஜனத்திற்கும் செய்ததில்லை என்றே கூறலாம்!! (எபி.3:17).*

*இது, மாம்சத்தின்படி நடக்கிற விசுவாசிகளுடைய ஜெபத்திற்கு கூட தேவன் பதிலளிக்கிறார் என்றும்,*

அவர்களுடைய உலகத்தேவைகளை-அவசியமானால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலும் சந்திக்கிறார் என்றும் நமக்குப் போதிக்கிறது. தேவன் நமக்கு அற்புதம் செய்தால், அது நம்முடைய **ஆவிக்குரிய வளர்ச்சி** ஒன்றையும் நிரூபிக்கிறதில்லை. அது, தேவன் நீதிமான்கள் மேலும் அநீதிமான்கள் மேலும் ஒரே விதமாய் தமது சூரியனை உதிக்கப் பண்ணுகிற நல்ல தேவன் என்பதை மட்டுமே நிரூபிக்கிறது!!

மேலும் நியாயத்தீர்ப்பின் கடைசி நாளில் அவரது நாமத்தில் அற்புதம் செய்த அநேகர் 'அக்கிரமமுள்ளவர்கள்' எனப் புறக்கணிக்கப் படவே தகுதியுள்ளவர்களாவார்கள் (மத்.7:22,23) என இயேசு நமக்கு போதிக்கிறார். அவரது நாமத்தினால் மெய்யான அற்புதங்கள் செய்கிற கிறிஸ்தவ பிரசங்கிமார்களையும், குணமாக்குகிறவர்களையும்தான், அவர் இங்கு தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின்படி இந்த அற்புதஞ்செய்யும் ஊழியம் கொண்டவர்களில் அநேகர் (ஒரு சிலரல்ல, எல்லோருமல்ல, ஆனால் **அநேகர்**) தங்கள் தனிப்பட்ட வாழ்விலும், தங்கள் சிந்தனை வாழ்விலும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அது கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் பகிரங்கமாக்கப்படும்!!

ஒரு மனிதன் தேவனால் அங்கீகரிக்கப்பட்டான் என்பதற்கு, "அற்புதங்கள் செய்வது" ஒருவிதத்திலும் அடையாளமாகாது என்பதை நமக்கு தெளிவாகப் போதிக்கிறது. காதுள்ளவன் கேட்கக்கடவன்! இல்லையேல் வஞ்சிக்கப்படுவான்!!

தனது முப்பதாவது வயதில் இயேசுகிறிஸ்து "இதோ என் நேச குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" (மத்.3:17) என்று பிதாவினால் வானத்திலிருந்து எல்லோரும் கேட்கும்படியாக **நற்சாட்சி** பெற்றார். "அந்த நேரம்" அவர் ஒரு அற்புதமோ ஒரு பிரசங்கமோ ஒன்றும் செய்யாதிருந்த வேளை! அப்படியானால், தேவனால் அவர் நற்சாட்சி பெற்ற அந்த இரகசியம்தான் என்ன? ஆம், அது அவரது ஊழியத்தினால் அல்ல அவரது ஜீவியத்தினால்தான் நற்சாட்சி பெற்றார் என்பது தெளிவு!

*நமது ஊழியங்களின் வளர்ச்சியினால் நாம் அங்கீகரிக்கப்படமாட்டோம். மாறாக, நம் அனுதின வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாய் இருப்பதை வைத்தே அங்கீகரிக்கப்படுவோம்!*

மறைவாயிருக்கும், இயேசுகிறிஸ்துவின் 30-ஆண்டு கால வாழ்க்கையைப் பற்றி நமக்கு சொல்லப்பட்டிருப்பதெல்லாம் (தேவாலயத்தில் அவர் போதகருடன் பேசினதைத் தவிர்த்து) அவர் நம்மைப்போல் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவம் செய்ய வில்லை என்றும் (எபிரெயர்.4:15), அவர் தனக்கே பிரியமாய் நடக்கவில்லை என்றும்தான் (ரோமர்.15:3) சொல்லப்பட்டிருக்கிறது. அவர் உண்மையுள்ளவராய் எல்லாவிதமான சோதனைகளையும்

*எதிர்த்தார்.* **ஒன்றிலும் அவர் தனக்கானவைகளை நாடவில்லை.** *இதுதான் பிதாவைப் பிரியப்படுத்தியது!*

*நமது வெளியரங்கமான சாதனைகள் இவ்வுலகத்தையும், மாம்சப் பிரகாரம் நடக்கும் விசுவாசிகளையும் பூரிப்படையச் செய்யும்! ஆனால் தேவனோ நமது குணாதிசயங்களில் மட்டுமே பிரியப்படுகிறார். ஆகையால் நம்மைப் பற்றிய தேவனுடைய கருத்து என்னவென்று அறிய விரும்பினால், நம்முடைய ஊழியச் சாதனைகள் நம் மனதில் எவ்வகையிலும் இராதபடி அதை நீக்கிவிட்டு, நமது சிந்தனைகளில் காணப்படும் பாவத்தைக் குறித்து, நமது மனப்பான்மை என்னவாய் இருக்கிறது என்பதை மாத்திரம் கவனமாய் கொண்டு ஆராய வேண்டும். அதுதான், அதுமட்டுமே.... நமது ஆவிக்குரிய நிலையை, நிர்மானிக்கும் ஒரு பழுதற்ற அளவுகோலாகும்.*

*"இப்படியாக" உலகமெங்கும் சுற்றி சுகமளிப்பவர்களும் பிரசங்கிமார்களும்.... வீட்டில் இருந்து ஓய்வில்லாமல் வேலை செய்யும் ஒரு தாயும், தேவனுடைய நற்சாட்சியைப் பெறுவதற்கு* **சரிசமமான வாய்ப்பு** *உள்ளவர்களாய் இருக்கின்றனர். இதனால்தான், இங்கு கிறிஸ்தவ உலகில் முதலாவதாக இருப்பவர்கள் கிறிஸ்துவின் நியாயாசனம் முன் கடைசியாகவும், இவ்வுலகில் கடைசியாக கருதப்படும் அநேகர் (அதாவது, புகழ் பெற்ற ஊழியம் இல்லாதவர்கள்) அங்கு முதலானவர்களாகவும் காணப்படுவார்கள்!!*

*எல்லாக் காரியங்களிலும் இயேசுகிறிஸ்துவே நமக்கு முன்மாதிரி. இயேசுவின் முதல் முப்பது வருட பூமியின் வாழ்வைக் கணிக்க, பிரதானமாக* **இரண்டு** *இடங்களை பிதா ஏற்பாடு செய்திருந்தார். ஒன்று அவரது* **வீடு.** *மற்றொன்று, அவர்* **வேலை செய்யும் இடம்** *(தச்சுக்கூடம்). இவ்விரு இடங்களிலேயும் இயேசுகிறிஸ்து உண்மையுள்ளவராய் இருந்ததுவே, அவருக்குப் பிதாவின் நற்சாட்சியைக் கொண்டு வந்தது. இது நம் எல்லோருக்கும் மிகவும் உற்சாகமளிக்கும் விஷயமாய் இருக்கிறது! ஏனென்றால் நாமெல்லாரும் இவ்விரு இடங்களிலேயும் தான் இடைவிடாது காணப்படுகிறோம்-நமது வீடு; வேலை செய்யும் இடம்! இவ்விரு இடங்களில்தான் நம்மை தேவன் பிரதானமாக பரீட்சிக்கிறார்.*

*இயேசுகிறிஸ்து வாழ்ந்ததோ ஒரு எளிமையான குடும்பத்தில்! யோசேப்பும் - மரியாளும் ஒரு ஆட்டுக்குட்டியைக் கூட தகனபலியாக கொடுக்க முடியாத அளவிற்கு வறுமையிலிருந்தார்கள் (லூக்.2:24-ஐ லேவி.12:8 வசனத்துடன் ஒப்பிட்டு பார்க்கவும்). இயேசுவுக்கு இளையவர்களான நான்கு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் அதே வீட்டில் வசித்து வந்தனர் (மாற்கு.6:3). அந்த எளிய குடும்பத்தில் வளரும்போது இயேசுகிறிஸ்து சந்தித்த கஷ்டங்களையும், போராட்டங்களையும் நாம் யூகித்துக் கொள்ளலாம். அவருடைய இளைய*

*சகோதரர்களோ அவிசுவாசிகள்! (யோவான்.7:5).* பலவழிகளில் அவர்கள் அவரை பரிகசித்து நெருக்கியிருக்க வேண்டும். அந்த வீட்டில், பிறரிடமிருந்து வரும் சோதனைகளின் நெருக்கத்தில், சற்று தனித்திருக்க அவருக்கு ஒரு தனி அறைகூட இருந்திருக்காது. எல்லா குடும்பங்களிலும் காணப்படும் சண்டைகளும், சச்சரவுகளும், தூஷணங்களும், சுயநலங்களும் அந்தக் குடும்பத்திலும் இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களின் மத்தியில் இயேசுகிறிஸ்து நம்மைப்போல் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் ஒரு முறைகூட பாவஞ்செய்யவில்லை (எபி.4:15).

இயேசு, நம்மைப்போலன்றி, சோதிக்கப்பட முடியாத வேறு விதமான ஒருவகை மாம்சத்தில் வந்திருப்பாரானால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் பரிசுத்தமாய் வாழ்ந்ததில் ஒருவித மகிமையும் விசேஷமுமில்லை. ஆனால் அவர் எல்லாவகையிலும் நம்மைப் போலானார் (எபி.2:17). நாம் எந்தக் காலத்திலும் சந்திக்கக்கூடிய எல்லாவிதமான சோதனைகளுக்கும் உட்பட்டு நெருக்கப்பட்டார். இதுதான் நாம் சோதிக்கப்படும்பொழுது, **நாமும்கூட ஜெயங்கொள்ளலாம்** என்கிற மாபெரும் உற்சாகத்தையும், தைரியத்தையும் நமக்களிக்கிறது. கிறிஸ்து நம்முடைய மாம்சத்தில் வந்தார் என்பதையும், நம்மைப் போலவே எவ்வகையிலும் சோதிக்கப்பட்டார் என்பதையும் மறுப்பதன் மூலம் **இந்த நம்பிக்கையை** நம்மிடமிருந்து திருடிவிட சாத்தான் முயற்சிக்கிறான்.

நாசரேத்தில் தச்சராகிய இயேசு, எந்தவிதமான வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கும் யாதொருவரும் சந்திக்கக்கூடிய சோதனைகளை கட்டாயம் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் அவர் எதையாகிலும் விற்பதில், யாரையும் வஞ்சித்திருக்க மாட்டார். எந்தப் பொருளுக்கும் அதிகமான விலையைக் கேட்டிருக்க மாட்டார். மேலும் நீதிக்கடுத்த எந்த விஷயத்திலும், அதன் விலை (அல்லது, நஷ்டம்) எவ்வளவா யிருந்தாலும் அவர் ஒருபோதும் அநீதிக்கு உடன்பட்டிருக்கமாட்டார். நாசரேத்தில் மற்ற தச்சருடன், அவர் போட்டி போடவில்லை. வாழ்க்கைக்கு வேண்டியதை சம்பாதிக்க மாத்திரம் அவர் வேலை செய்தார்.

*இப்படியாக வாங்கியும் விற்றும்; தச்சர் என்ற முறையில் பணத்தை புழங்கினதாலும், நாம் பண விஷயத்தில் சந்திக்கக்கூடிய எல்லாவிதமான சோதனைகளையும் இயேசு சந்தித்தார்! அதை மேற்கொண்டார்!!*

இயேசுகிறிஸ்து, தம் பூரணமில்லாத வளர்ப்பு பெற்றோர்களுக்கு அநேக வருடங்கள் கீழ்ப்படிந்து வாழ்ந்தார். இதுவும்கூட அவரை அநேகவித உள்ளான, ஒருவரும் காணக்கூடாத சோதனைகளுக்கு (அவர்களைக் குறித்த மனப்பான்மை காரியங்களில்) உட்படுத்தியிருக்க வேண்டும். ஆனாலும் அவர் பாவம் செய்யவில்லை!

இப்படியாய் இயேசுகிறிஸ்துவின் 30 வருட நாசரேத்து வாழ்க்கை நம்போன்ற நடைமுறை சம்பவங்கள் இல்லாத ஒன்றல்ல. மாறாக, அந்நாட்களில் இயேசுகிறிஸ்து சோதனைகளின் மத்தியில் போராட்டத்தில் வாழ்ந்தார். அந்த போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டும் இருந்தது. ஏனென்றால், இரட்சிப்பின் அதிபதியாகிய அவரை, நம்முடைய இரட்சகரும், பிரதான ஆசாரியராயும் ஆக்கும் பொருட்டு, மனிதவர்க்கத்திற்கு நேரிடக்கூடிய எல்லா சோதனைகளுக்குள்ளும் அவரை பிதாவானவர் கொண்டு சென்றார் (எபிரெயர்.2:10,17; 4:15).

இயேசுகிறிஸ்து தன்னுடைய கடைசி 3 ½ வருட காலத்தில் தேசம் முழுவதும் அறியப்படுவதினால் வரும் **புகழ்ச்சி** போன்ற காரியங்களில், இன்னும் சோதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால், நாம் வீட்டிலும் வேலையிலும் சந்திக்கும் எல்லாவிதமான சாதாரண சோதனைகளையும், முதல் 30-வருட காலத்தில் சந்தித்து வெற்றி பெற்றார்! எனவேதான், அவர் ஞானஸ்நானத்தின்போது பிதா அவருக்கு நற்சாட்சி கொடுத்தார்.

தேவன் எந்த அடிப்படையில் அங்கீகரிக்கிறார் என்பதை அறிய நம் கண்கள் திறக்கப்படுமானால், அது நம் ஜீவியத்தை முழுவதும் மாற்றி ஒரு எழுச்சியை உண்டாக்கும். நாம் ஒருபோதும் உலகப்பிரசித்தி பெற்ற ஊழியத்தை வாஞ்சிக்க மாட்டோம். மாறாக அன்றாட வாழ்க்கையில், சோதனைகளில், உண்மையுள்ளவர்களாயிருப்போம்! நாம் வெளிப்பிரகாரமான அற்புத அடையாளங்களைப் போற்றுவதை விடுத்து, மறுரூபப்பட்ட ஜீவியத்தையே போற்றுவோம். இப்படியாய் நம்முடைய மனம், தேவன் வலியுறுத்திய முக்கியத்துவத்தை அறிந்தால் மாத்திரமே புதிதாக்கப்படும்!!

“என் பிதாவிற்கு கீழ்ப்படியாமலோ அல்லது பாவம் செய்வதையோ காட்டிலும் நான் மரிப்பேன்” என்ற இந்த இயேசு கிறிஸ்துவின் மனோபாவத்தோடு சோதனையை சந்திக்கிறவர்களுக்கு, தேவனிடத்திலிருந்து வரும் புகழ்ச்சியும், பலனும் எவ்வளவு பெரியது என்பதை நாம் அறியும்பொழுது நமக்கு உற்சாகமாய் இருக்கிறது! பவுல் பிலிப்பியருக்கு புத்தி சொல்லும்பொழுது “மரணபரியந்தம் கீழ்ப்படிந்த வராய் காணப்பட்ட.... இயேசு கிறிஸ்துவில் இருந்த அதே சிந்தனை உங்களிலும் இருக்கக்கடவது” என்று சொல்வதின் அர்த்தமும் இதுதான்! (பிலிப்பியர்2:5-8). இப்படியாக, நாம் எந்தக் காலத்தில் உள்ளவர்களானாலும், ஆணாயினும், பெண்ணாயினும், எந்தவித வரம் பெற்ற ஊழியம் உடையவர்களானாலும், ஜெயங்கொள்கிறவர்களாயும், அந்த அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், **உண்மையுள்ளவர்களும்** என்றழைக்கப்படுகிறவர்களில் ஒருவராகவும் காணப்பட நமக்கு சம வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது!!

# 3



## ஆதாம், ஏவாள் சோதிக்கப்படுதல்

தேவன் ஆதாமையும், ஏவாளையும் உண்டாக்கின போது அவர்களுக்கென்று பெருந்திட்டங்களைத் தன் மனதில் வைத்திருந்தார். ஆனால், அவர்கள் **பரீட்சை** செய்யப்பட்டாலன்றி அத்திட்டங்களை நிறைவேற்ற முடியாது.அதனால்தான் அவர் நன்மை தீமை அறியக்கூடிய மரமொன்றை ஏதேனில் வைத்து, அந்த நேர்த்தியான மரத்தின் இச்சிக்கத்தகும் கனிகளை புசிக்கக் கூடாது எனவும் அவர்களுக்கு கட்டளையிட்டார்.

ஆதாம், ஏவாள் அடைந்த தோல்வி, பிரதானமாக ஒரு விசுவாசத் தோல்வியே ஆகும். தேவனுடைய ஞானம்; அன்பு; வல்லமை ஆகியவைகளின் மேலுள்ள முழு நம்பிக்கையினால், மனுஷ ஆத்மாவானது (Human Personality) முற்றிலும் தேவனை சார்ந்து கொள்வதே விசுவாசமாகும். ஏவாள், தேவன்மேல் அந்த நம்பிக்கை கொள்ளத் தவறியதால், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போகும்படி, சாத்தானால் கவர்ந்து கொள்ளப்பட்டாள்.

அந்த மரத்தை அவர்கள் அனுபவிக்கத் தடுத்த தினால், தேவனுடைய ஞானத்தில் பிழைகளுண்டு என ஏவாளிடம் சாத்தான் ஓதினான். அந்த மரம் ஏன் விலக்கப் பட்டது என, தேவனும் ஆதாமுக்கு எந்தவித காரணமும் கொடுக்கவில்லை! விசுவாசத்தைக் கொண்டு நாம் ஜீவிக்கிறபொழுது, தேவனுக்கு கீழ்ப்படிவதற்கு முன்பாக நாம் காரணங்களை அறியத் தேவையில்லை. காரணத்தை முதலாவது அறிய வேண்டுமென்று நிபந்தனை போடுவது நமது சுயபுத்தியே ஆகும் (ரோமர் 1:5; 16:26).

நமது **சுயபுத்தி** விசுவாசத்திற்கு விரோதமானது என்பதை நீதிமொழிகள்.3:5,6 வசனங்கள் தெளிவாக்கு கின்றன. "உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு

*இருதயத்தோடும் ('தலை'யோடல்ல) கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஞானமானது, திறமை சாலிகளுக்கும், அறிவாளிகளுக்கும் மறைவாயிருந்து,* **சிறு குழந்தைகள் போல** *(மத்தேயு.11:25) அப்படியே விசுவாசிப்போருக்கு மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சுயபுத்தியானது சிறந்த வேலைக்காரன், ஆனால் பொல்லாத எஜமான்! ஆதலால் தேவனை நம்பி விசுவாசத்துடன் வாழும் மனிதனின் ஆவிக்கு, "புத்தி" ஒரு வேலைக் காரனாய் இருப்பதுவே தேவன் நியமித்திருக்கிற நியதி!*

விலக்கப்பட்ட மரத்தின் கனியை ஏன் ஆதாம் புசிக்கக்கூடாது என்ற காரணத்தை தேவன் கொடுக்கவில்லை. ஏனெனில், தம்மேலுள்ள ஆதாமின் விசுவாசத்தை தேவன் வர்த்திக்க விரும்பினார். தேவன் நம்மை பரீட்சிக்கும் முதல் தருணமே இதுதான்! ஏதாவதொன்றைச் செய்யும் படி தேவன் நம்மை அழைக்கும்போது, ஏனென்று விளக்கங்கள் அறியாமல் கூட நம்மால் கீழ்ப்படிய முடியுமா? நமது புத்தியின்படி ஆபத்தானது என அறிந்ததைச் செய்ய தேவன் அழைத்தால் என்ன செய்வோம்?

படகை விட்டிறங்கி தண்ணீரின்மேல் நடக்கும்படி இயேசு கட்டளையிட்டபோது, அது பேதுருவின் புத்திக்கும், கணிப்பிற்கும் முற்றிலும் விரோதமாக இருந்தது. தன்னுடைய சுயபுத்தியைப் பின்பற்றியிருப்பானேயானால் ஒருபோதும் அந்த அற்புதத்தை அவன் அனுபவித்திருக்க முடியாது. வேதத்தில் இதுபோன்ற அநேக சந்தர்ப்பங்களைக் காணலாம். அநேக கிறிஸ்தவர்கள் வல்லமையின்றி இருப்பதற்கும், அநேக விசுவாசிகள் இயற்கைக்கு மிஞ்சிய தேவ செயல்களை தங்கள் வாழ்க்கையில் அனுபவியாமல் போவதற்கும் இதுவே காரணம். அவர்கள் தங்கள் விசுவாசத்தாலல்ல, தங்கள் புத்தியில் பிழைக்கிறார்கள்.

ஆம், விசுவாசம் என்பது தேவனுடைய அன்பில் வைத்திருக்கும் முழு நம்பிக்கையே ஆகும். அவர்களை ஏற்ற அளவு தேவன் நேசிக்காத படியினால்தான், அவர்களுக்கு அந்த நேசிக்கப்படக்கூடிய கனியை விலக்கியிருக்கிறார் என்று சாத்தான் ஏவாளிடம் ஓதினான். ஏவாள் தன் புத்தியின்படி பிழைக்காமல் விசுவாசத்தினால் பிழைத்திருப்பாளே யானால், அவள் இப்படியாக பதில் சொல்லியிருப்பாள், "நல்லது சாத்தானே....

> *அந்த மரத்தின் கனியை புசிக்கக்கூடாது என்று தேவன் ஏன் சொன்னார் என்பதை நான் தெளிவாக அறியவில்லை. ஆனால் ஒன்றை தெளிவாக நான் அறிந்திருக்கிறேன்–தேவன் எங்களை வெகு அதிகமாய் நேசிக்கிறார் என்பதையும்; ஆனபடியால் நன்மையான யாதொன்றையும் அவர் எங்களுக்கு மறுக்கமாட்டார் என்பதையும் நிச்சயமாக அறிந்திருக்கிறேன்.*

..... எனவே அவர் இந்தக் கனியை எங்களுக்கு விலக்கினால் அதற்கு

மிகச் சரியானதொரு காரணம் இருக்கும். அதுவும், எங்கள் நன்மையை மனதில் கொண்டே செய்திருப்பார்!" என்றே பதில் சொல்லியிருப்பாள். விசுவாசத்தினால் வரும் பதில் அப்படித்தான் இருந்திருக்கும். ஆனால் இதற்கு மாறாக, அவள் பிசாசின் பொய்யில் விழுந்துவிட்டாள்! பொல்லாங்கன் எய்யும் அக்கினி யாஸ்திரங்களையெல்லாம் நாம் அவித்துப்போட, "நம்பால் தேவன் வைத்திருக்கும் அன்பின் மேலுள்ள விசுவாசம்" என்னும் கேடகத்தினால்தான் முடியும் (எபேசியர்.6:16).

எல்லாச் சோர்வுகளும், மனக்கலக்கமும், சுயபுத்தியின்படி பிழைப்பதன் விளைவேயன்றி, விசுவாசத்தினால் வருவதல்ல. எல்லா கவலைகளுக்கும், பயங்களுக்கும் உரிய வேர்கள்கூட அதே காரணத்தினால்தான் இருக்கிறது. தேவன், நாம் சோதிக்கப்படவே அனுமதிக்கிறார். அவருடைய பிரசன்னத்தை அறியும் உணர்வை நம்மிலிருந்து நீக்கும்போது, நாம் அவரது அன்பை சந்தேகிக்கும் படியான சூழ்நிலையைகூட அனுமதித்து நம்மைப் பரீட்சிக்கிறார். இதனால் நாம் விசுவாசத்தில் பலப்பட்டு, தேறினவர்களாகி, தேவன் நம்மைக் கொண்டு தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும் நிலைக்கு நாம் வளருகிறோம்.

இதனிமித்தமே, நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை மிகவும் நேர்த்தியானதாக தேவன் படைத்தார். அப்போதுதான் ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்பட முடியும். "தேவனுக்காக" மிகவும் கவர்ச்சியானதை அவர்கள் தள்ளிவிடுவார்களா? அல்லது "தேவனைத் தள்ளி" தங்களுக்குப் பிரியமானதைத் தாங்களே தெரிந்து கொள் வார்களா? ஆம், நாம் சோதிக்கப்படுகிற வேளையில் நம்மைச் சந்திக்கிற கேள்வி இதுதான். அதனால்தான், சோதிக்கப்படுகிற விஷயத்தை மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்க தேவன் அனுமதித்திருக்கிறார்.

> *உண்மையாகவே கவர்ச்சிகரமானதும், நம்மை பலமாக அதன்பக்கம் இழுக்கிறதாயும், இன்பம் தருமென்று நாம் அறிந்ததுமானதொன்றை, நமக்கு விலக்கப்பட்டதினிமித்தம் அதை நாம் தள்ளிவிடும்போது.... தேவனை முழு இருதயத்துடன் நேசிக்கிறோம் என்று நிரூபிக்கிறோம்!*

எப்படியெனில், தேவன் எதை நமக்கு விலக்கினாரோ, அதை நமது சிறந்த நலனுக்கென்றே **தம்முடைய பரிபூரண அன்பினால்** விலக்கினார் என்று நம்புகிறோம், பின்பு நிரூபிக்கிறோம்! இப்படியாக ஒவ்வொரு முறையும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகும்படி, பாவம் செய்யும்படி சோதிக்கப்படுகிற சோதனைகள் எல்லாம், நம் விசுவாசத்திற்கு ஏற்பட்டிருக்கும் சோதனையாகவே இருக்கிறது. விசுவாசத்தினால் பிழைப்பது என்பது தேவனுடைய ஒவ்வொரு கட்டளையும், அவருடைய பூரண அன்பின் இருதயத்திலிருந்து புறப்பட்டது என்று நம்புவதேயாகும். இதனிமித்தமே இஸ்ரவேலருக்கு தேவன் பத்து கட்டளைகளை கொடுத்தபோது, மோசே "தேவன் உங்களை

சோதிப்பதற்காக (to test you).... எழுந்தருளினார்" (யாத்.20:20) என்றான். அந்த அக்கினிமயமான பிரமாணங்கள், தேவன் அவர்கள் மேல் கொண்ட 'அன்பிற்கு அடையாளம்' என அவர்கள் நம்புவார்களா? (உபாகமம்.33:2,3). அதுவே பரீட்சை!

ஏவாள், தேவனை நம்புவதில் எங்கு தோற்றுப்போனாளோ, அங்குதான் இஸ்ரவேலரும்கூடத் தோற்றுப்போனார்கள். அவர்களும் கூட தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவில்லை. ஆனால் இந்த விஷயத்தில் **இயேசு ஜெயங்கொண்டார்.** அவர் விசுவாசத்தினால் வாழ்ந்தார். வனாந்தரத்தில் சாத்தான் கொண்டுவந்த ஒவ்வொரு சோதனையையும் "இப்படி எழுதியிருக்கிறதே" என்று எளிய வார்த்தையைக் கொண்டு ஜெயித்தார். மனுஷனுடைய மிகுந்த நலனுக்கென்று, பூரண அன்பினால் தேவனுடைய வார்த்தை கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு விசுவாசத்தினால் அதற்கு கீழ்ப்படிந்தார். இப்படியாக அவர் நமக்கு முன்னோடியாய் இருக்கிறார்! தேவ ஜனங்களுக்கு பயனுள்ள ஊழியம் செய்ய வேண்டுமானால், நாம் விசுவாசத்தினால் பிழைப்பதும், நமது விசுவாசத்தை தேவ கட்டளைகளுக்கு பரிபூரணமாய் கீழ்ப்படிவதின் மூலம் வெளிப்படுத்துவதும், அத்தியாவசியமானதாகும். இவ்விதத்தில் மட்டுமே தேவ மந்தைக்கு நாம் முன்மாதிரியாக இருக்க முடியும்.

மேலும், விசுவாசம் என்பது **தேவ வல்லமையின் மேல்** உள்ள பூரண நம்பிக்கையுமாகும்! ஏவாள், தான் பாவத்தினால் இழுக்கப்படுவதை உணர்ந்து, அதை எதிர்க்க இயலாத நிலையில் தேவனை நோக்கி ஒத்தாசை கேட்டு அபயமிட்டிருக்கலாம்! அப்பொழுது அவள் உதவியை பெற்றிருக்க முடியும். எந்த பாவ சோதனையையும் மேற் கொள்ள, தேவவல்லமை போதுமானதாகவே இருக்கிறது.

> *இயேசுகிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில் அந்த வல்லமைக்காகவே கூக்குரலிட்டு கேட்டார் (எபி.5:7,8). அதனால்தான், அவர் பாவஞ்செய்யவில்லை. ஆகையால், நாமும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடைய தைரியமாகக் கிருபாசனத்தண்டை சேரக்கடவோம் என இப்போது கட்டளை பெற்றிருக்கிறோம் (எபிரெயர்.4:16).*

தேவன் தமக்கு சாட்சிகளைப் பூமியில் தேடுகிறார். அவருடைய ஞானம், அன்பு, வல்லமை ஆகியவற்றிற்கு மெய்யான சாட்சிகளைத் தேடுகிறார். புதிய ஏற்பாட்டு கட்டளைகளை, கிறிஸ்தவர்கள் 20-ஆம் நூற்றாண்டு நிலைமைக்கு ஏற்றார்போல மாற்றிக்கொள்ளும்போது, தேவனுடைய ஞானத்தின் மேல் தங்களுக்குள்ள அவிசுவாசத்தையே அதன்மூலம் வெளிப்படுத்துகிறார்கள். 20-ஆம் நூற்றாண்டு வாழ்வின் விநோதமான நெருக்கங்களை நிதானிக்க, ஆதியும் அந்தமுமான எக்காலமும் அறிந்திருக்கிற தேவத்துவம் போதாது என அவர்கள் எண்ணுகிறார்கள்!

தேவனுடைய கற்பனைகளில் **மிகச்சிறியதான** ஒன்றை தள்ளி விடுகிறவன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் சிறியவன் எனப்படுவான் என்று இயேசு சொன்னார் (மத்தேயு.5:19). தேவன் நம்முடைய கீழ்ப்படிதலையும், விசுவாசத்தையும், அவருடைய வார்த்தைகளில் **மிகச் சிறிய கட்டளையைக்** குறித்த நமது மனப்பான்மையின் மூலம் சோதித்தறிகிறார். "கொலை செய்யாதிருப்பாயாக.... விபச்சாரம் செய்யாதிருப்பாயாக...." என்பன போன்ற பெரிய கற்பனைகளை அநேக கிறிஸ்தவர்கள், ஏன் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும்கூட கடைப்பிடிக்கின்றனர்.

*ஆனால் தேவனிடத்திலிருந்து நாம் நற்சாட்சி பெறுவோமா? மாட்டோமா? என்பது அவரது கற்பனைகளில் சிறிதானதொன்றைக் குறித்து..... அதாவது, நீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவது போன்ற, மற்ற இரட்சிக்கப்பட அவசியமற்ற சிறிய கற்பனைகளைக் குறித்து நம்முடைய மனப்பான்மையையே பொருத்திருக்கிறது. இங்குதான் சபை பாகுபாடற்ற தன்மை (Inter denominationalism) தேவனுடைய நற்சாட்சியைப் பெற தவறிவிடுகிறது!*

ஏனென்றால், அது தேவனுடைய சிறிதான கற்பனைகளைத் தள்ளிவிடும்படி செய்து விடுகிறது. அப்படிப்பட்டவர்கள் அழிந்து போய் விட்டார்கள் என்று இயேசு சொல்லவில்லை. ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்தில், அவர்கள் எல்லோரிலும் சிறியவர்கள் எனப்படுவார்கள் என்றார் இயேசு! பெண்கள் தலைக்கு முக்காடிடுவது இன்று மறைந்தும், மற்றும் விவாகரத்து, மறுமணம் போன்றவற்றைக் குறித்து அலட்சியமான **உலகத்தாருக்கொத்த மனப்பான்மை** சுவிசேஷக மற்றும் பெந்தெகொஸ்தே வட்டாரங்களில் காணப்படுவதும் (முக்கியமாக மேல் நாடுகளில்) கிறிஸ்தவர்கள் மத்தியில் சாத்தான் செய்துள்ள கிரியைகளுக்கு அத்தாட்சியாய் இருக்கிறது. "அப்படி மெய்யாகவே தேவன் சொன்ன துண்டோ?" என்று ஏவாளிடம் அவன் கேட்டான். இன்றும் அதே கேள்வியின் மூலம்தான் சாத்தான் கிறிஸ்தவர்கள் மத்தியில் கீழ்ப்படியாமையை கொண்டுவருகிறான்.

தேவன் ஆதாமையும், ஏவாளையும் சோதித்தறிகையில் அவர்கள் தோற்றுப்போனார்கள். இன்று நீங்களும் நானும் பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்!

# 4



## யோபு சோதிக்கப்படுதல்

**தே**வ மனுஷரின் வாழ்க்கை வரலாறும், தேவனுக்குத் தோல்வியைக் கொண்டு வந்தவர்களின் வாழ்க்கை வரலாறும் நமது போதனைக்காகவும், எச்சரிப்புக்காகவும் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் ஆவியானவரின் சத்தத்திற்கு இசைந்து நம் செவியைப் பக்குவப்படுத்தி அவைகளை வாசித்து தியானிப்போமானால் அநேக பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

பழைய ஏற்பாட்டு மக்களைக் குறித்து வாசிக்கிற வேளையில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு உண்மை யாதெனில், அவர்கள் எல்லோரும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் **'கிருபை'** வருவதற்கு முன்னால் வாழ்ந்தவர்கள் (யோவான்1: 17). ஆதலால் அவர்களைப் புதிய ஏற்பாட்டின் வாழ்க்கைத் தரத்திற்கு ஒப்பாய் எதிர்பார்க்க முடியாது (உதாரணமாக மத்தேயு.19:8,9ஐப் பார்க்கவும்). தேவனும் அவர்களிடம் அந்த தரத்தை எதிர்பார்க்கவில்லை.

"**நீதிமானை சோதித்தறிகிற தேவன்**" என்றே தேவன் அழைக்கப்படுகிறார் (எரே.20:12). தீமை செய்யும்படி (To Tempt) ஒருவனையும் அவர் சோதிக்கிறவரல்ல (யாக்.1:13). ஆனால் நீதிமானையோ அவர் சோதித்தறிகிறவர் (Test).

பழைய ஏற்பாட்டு தேவனுக்கு உகந்த தாசர்களில் யோபுவும் ஒருவன். "பூமியின் மேல், தேவனுக்குப் பயந்து பொல்லாப்பை வெறுத்துத் தன் வழிகளிலெல்லாம் குற்றமற்றவனும் சன்மார்க்கனுமான ஒருவன் உண்டு," என தேவன் அவனை சாத்தானுக்கு சுட்டிக்காட்ட முடிந்தது. யோபுவின் அறிவையோ தாலந்துக்களையோ செல்வத்தையோ குறித்து தேவன் சொல்லவில்லை. இவைகள், தேவனுக்கு மதிப்புள்ளவைகள் அல்ல. அவனது

பரிசுத்தத்தையும், செம்மையையும் மட்டுமே சுட்டிக் காண்பித்தார். யோபுவின் சாதனைகளையோ, ஊழியங்களையோ கண்டு அவர் பூரித்துப் போகாமல், "இயேசு கிறிஸ்துவின் விஷயத்தில் நாம் கண்டதுபோல" அவன் நற்குணங்களைக் கண்டே, தேவன் பூரித்து மகிழ்ந்தார்.

சாத்தானுக்குக்கூட, இயற்கைக்கு மிஞ்சின வரங்களும் அறிவும் உண்டு. அவனுக்கு வேதஅறிவுகூட உண்டு. ஆயினும் தேவன் கவனிக்கிறார் என்றால், குணத்தையே கவனிக்கிறார்! தேவன் நம்முடைய வேத அறிவையல்ல, குணத்தையே சோதித்தறிகிறார். தேவன் சாத்தானிடம் சுட்டிக்காட்டி, தான் பெருமைப்படும்படி ஒரு மனுஷனைத் தேடுகிற வேளையில், அவர் குணாதிசயமுள்ள, குற்ற மற்றவனும் செம்மையுமான தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான ஒரு மனிதனையே தேடுகிறார்.

*மற்ற "விசுவாசிகளுக்கு முன்" நமது ஆவிக்குரிய நடத்தையினிமித்தம் நமக்கு சிறந்த புகழ் இருக்கலாம். ஆனால் நம்மை உள்ளும் புறமும் ஆராய்ந்து அறிந்திருக்கிற "தேவன்" நம்மை சாத்தானிடம் சுட்டிக் காட்ட முடியுமா?*

யோபு தேவனிடம் பெற்ற அவ்வித நற்சான்று, நாம் பெறக்கூடிய எந்தவித லௌகீக கௌரவத்தைக் காட்டிலும் பெரியது. கிறிஸ்தவத்தின் சகல போலிக் கௌரவங்களும் அதனுடன் ஒப்பிடுகையில், உபயோகமற்ற குப்பைகளேயாகும். ஆதலால் நமக்கு மிக முக்கியமான கேள்வி "மற்றவர்கள் என் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்" என்பதல்ல..... ஆனால் "தேவன் என்னை சாத்தா னிடம் சுட்டிக்காட்டி பெருமை பாராட்டிக் கொள்வாரா?" என்பதே.

தேவன் யோபுவை சாத்தானிடம் சுட்டிக் காண்பிக்கும்போது, நன்மையும் பிரதிபலனும் அடைகிறதினிமித்தமே யோபு தேவனுக்கு ஊழியம் செய்கிறான் என, சாத்தான் தேவனிடம் கூறினான். அதை தேவன் மறுத்து, அவன் குற்றச்சாட்டு உண்மையல்ல என அறியும்படி, அவனே யோபுவை சோதித்துப் பார்த்துக்கொள்ளும்படி சாத்தானை அனுமதித்தார். ஏனெனில், தேவன் யோபுவின் உத்தமமான வழுவாத் தன்மையை (integrity) அறிவார்.

நம்முடைய நிலைமை என்ன? நாம் பொருள் லாபத்திற்காக தேவனுக்கு ஊழியம் செய்கிறோமா? நம்மில் யாரையாவது சாத்தான் "இவன் சுயலாபத்திற்காக தேவனுக்கு ஊழியம் செய்கிறான்" என அவரிடம் குற்றம் சாட்டினால், தேவன் அதை சரியென ஆமோதிக்க வேண்டியதிருக்குமோ?

அந்தோ! இந்திய நாடு, சுயலாபத்திற்காக ஊழியம் செய்யும் கிறிஸ்தவ ஊழியர்களாலும், போதகர்களாலும் நிறைந்திருக்கிறது. அது ஒருவேளை சம்பளமாக இருக்கலாம். அல்லது சில கௌரவங்கள், பதவி, மேல் நாடுகளுக்குச் செல்ல இலவசப் பயணவாய்ப்பு போன்றவைகளாக

இருக்கலாம். கிறிஸ்தவ ஊழியத்தை சம்பளத்திற்காகச் செய்யும் யாரானாலும், அவர்கள் தேவனுக்கல்ல, உலகப் பொருளுக்கே (Mammon) ஊழியம் செய்கிறார்கள். தேவனுக்கு செய்யப்படும் மெய்யான ஊழியத்திற்கு ஏதாவதொரு கிரயம் செலுத்த வேண்டியதிருக்கும் (2சாமுவேல். 24:24). அதனால் நமக்கு பொருள் நஷ்டம் வருமேயன்றி, இலாபம் வராது. லாபம் ஆவிக்குரியவைகள் மட்டுமே! மாறாக, பொருட்பலன்கள் கொண்டு வருபவைகள் எவைகளும் பாபிலோனைச் சேர்ந்ததேயன்றி பரம எருசலேமைச் சேர்ந்தவைகளல்ல (வெளி. 18:15).

தனக்கானவைகளைத் தேடும் கிறிஸ்தவ ஊழியர்களின் மத்தியில் **தீமோத்தேயுவை** பவுல் ஒரு கிடைத்தற்கரிய விதிவிலக்காக சுட்டிக் காண்பிக்கிறார் (பிலிப்பியர்.2:19-21). ஆம், பவுல் வஞ்சிக்கப்படவில்லை. தேவனும் வஞ்சிக்கப்படுவதில்லை!

*தேவனுக்கு, அவ்வளவு பெரிய நம்பிக்கை யோபுவின் மேல் இருந்தபடியால், சோதித்துப் பார்த்துக் கொள்ளும்படி, அவரால் சாத்தானிடம் சவாலிட முடிந்தது.*

யோபு தன் எல்லாக் குழந்தைகளையும், சகல சொத்துக்களையும் ஒரே நாளில் இழந்தான். ஆயினும் தேவனைப் பணிந்துகொள்வதிலும், கீழ்ப்படிவதிலும் அவன் தவறவில்லை (யோபு 1:20-22). அவனுக்கிருந்த சகலமும்-குழந்தைகள், சொத்துக்கள் ஏன் அவனது உடல் ஆரோக்கியம் கூட தேவன் இலவசமாய் கொடுத்த பரிசுகள் என அவன் அறிந்திருந்தான். தேவன் விரும்பினால், அவைகளை எடுத்துக்கொள்ள அவருக்கு எல்லா உரிமையுமுண்டு. ஒருவன் எல்லாவற்றையும் விட்டு விடாவிட்டால், அதாவது **தனக்குச் சொந்தமானது** என்ற அதிகாரத்தை விட்டுவிடாவிட்டால், தேவனை மெய்யாக ஆராதிக்க முடியாது என்பதை யோபு அறிந்திருந்தான்.

தேவன், சாத்தானை மேலும் ஒருபடி முன்சென்று யோபுவை தலை முதல் பாதம் வரை கொடிய பருக்களால் வாதிக்க அனுமதித்தார். சாத்தானிடமிருந்துதான் நோய் வருகிறது. ஆயினும் தேவன் அதைத் தமது தாசர்களுக்கு பரிசுத்தமாக்குதலுக்கும், பரிபூரணமாக்குதலுக்கும் பயன்படுத்த முடியும். பவுலை உபத்திரவப்படுத்த, அவர் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அதை 'சாத்தானின் தூதன்' என்று குறிப்பாக அவர் கூறுகிறார். அது தேவ தூதன் அல்ல.... சாத்தானின் தூதன்! இருப்பினும், தேவன் அதை நீக்காமல், பவுல் திரும்ப திரும்ப ஜெபித்தும்கூட தொடர்ந்து இருக்க அனுமதித்தார். ஏனெனில், அது பவுலை தாழ்மையுள்ளவனாகக் காக்கும் நோக்கத்திற்காகவே பயன் பட்டது (2கொரி.12:7-9).

யோபுவை அவனது மனைவியின் மூலம் உபத்திரவப்படுத்துவது, சாத்தானின் மூன்றவாதுபடி! உங்கள் மனைவி உங்களுக்கு விரோதமாகத் திரும்பி உங்களைக் குற்றப்படுத்தும்போது, அது உண்மையில் உங்கள் பரிசுத்தமாகுதலுக்கு உள்ள சோதனையாகிட

*முடியும். தேவ வசனம் புருஷர்களுக்குக் கொடுக்கும் கட்டளையாவது, அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தங்கள் மனைவிமார்களைக் கசந்து கொள்ளாமல், எந்த சமயத்திலும் கிறிஸ்து சபையை நேசிப்பது போல அவர்களை நேசிக்க வேண்டும் என்பதேயாகும் (கொலே.3:19; எபேசி. 5:25). உங்களுக்கு சங்கடமான மனைவி வாய்த்திருந்தால், வாழ்வில் உங்களுக்கு கிடைத்திருக்கும் பங்கைக் குறித்து குறை சொல்லாமலும், தெய்வீக குணமுடைய மனைவிமார்களைப் பெற்றிருக்கும் மற்றவர்கள் மீது பொறாமை கொள்ளாமலும், உங்களுக்கு வாய்த்திருக்கும் சூழ்நிலைகள் உங்களைப் பரிசுத்தமாக்குவதற்கான வழி என்றே கருதலாம்! இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், தேவன் தம்முடைய நற்சாட்சியிதழைப் பெற நீங்கள் தகுதியுள்ளவர்தானோவென சோதித்துப் பார்க்கிறார்.*

> *உங்கள் மனைவி உங்களிடம் சத்தமிடும் போதும், குற்றங்கூறுகிறபோதும்.... தன் உறவினர்களால் பைத்தியக்காரன் என்றழைக்கப்பட்டபோதும் (மாற்கு.3:21), பொறுமையாய் சகித்த கிறிஸ்துவின் மெய்பிரதிநிதியாய் நீங்கள் ஆவதற்கு தகுதியுள்ளவர்கள் தானோவென தேவன் சோதித்துப்பார்க்கிறார்.*

*சாத்தானின் நான்காவது படி, யோபுடைய போதக நண்பர்கள் மூலம் யோபுவைக் குற்றப்படுத்தியதாகும்! இது மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் ஓர் பலத்த அடி! தேவனுடைய தீர்க்கதரிசிகள் போல, அந்த நண்பர்கள் யோபுவினுடைய நோய்படுக்கையில் வந்து, அவனுடைய எல்லா நோய்க்கும் காரணம் யோபுவின்* **அந்தரங்கப் பாவங்கள்தான்** *என்று கூறியபோது, யோபுவுக்கு அது எல்லாவற்றைக் காட்டிலும் பலத்த அடியாய் இருந்தது. இந்த நண்பர்கள், அவர்களை அறியாமலேயே தங்களுடைய சகோதரர்களைக் குற்றஞ்சாட்டுகிறவனுடைய (வெளி.12:10) கையாளாக நடந்து கொள்கிறார்கள் என்பதை உணரவில்லை. ஆனால் தேவனோ, யோபு பரிசுத்தமாகும்படியே அதை அனுமதித்தார்!!*

*யோபு கிருபையின் காலத்துக்கு முன் வாழ்ந்தபடியால், நமக்கு இன்று சாத்தியமாய் இருக்கும் "எப்பொழுதும் ஜெயங்கொள்ளுகிற வாழ்க்கையை" அவன் வாழவில்லை (ரோமர்.6:14). ஆகையால் அவன் சுயபட்சதாபத்திற்கும், சுயநீதிக்கும், மனசலிப்பிற்கும், விசனத்திற்கும் இரையாகினான். 'அவ்வப்போது' அவனுடைய விசுவாசம் இருளில் மின்னுவதைப் போலிருந்தது. ஆயினும் அது ஒரு நிலையில்லாத ஏறியிறங்குகிற அனுபவமாகவே இருந்தது.*

*இப்போதோ இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு கிருபை உண்டாயிருக்கிறபடியால், யோபுவைப்போல அவ்விதமாய் பரீட்சிக்கப் பட்டாலும், ஒரு கணப்பொழுதேனும் தளர்ந்து போகவோ, விசனப்படவோ அவசியமில்லை. புதிய ஏற்பாட்டுக் கட்டளைகள்* **"யாதொன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்....** *கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருங்கள்.... எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்....."*

என்றிருக்கிறது (பிலி.4:6,4; 1தெச.5:18). அப்படிப்பட்ட கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்போதோ தேவனுடைய கரத்தை நாம் **எல்லாவற்றிலும்** காணமுடியும்! மேலும் இடைவிடாமல் ஜெயம் பெற, கிருபையானது எந்த சமயத்திலும் கிடைக்கும் (2கொரி.2:14). நமது சொத்துக்களை இழக்கும்போது, நமது குழந்தைகளை இழக்கும்போது, நமது மனைவியர் குற்றப்படுத்தும் போது, விசுவாசிகள் நம்மைப் புரிந்துகொள்ளாமல் நம்மைக் குறித்து அவதூறு பேசும்பொழுது, தேவன் நமது வழிகளில் குறுக்கிடச் செய்து நம்மைச் சோதிக்க ஏற்றது எனக்கருதி அனுமதிக்கும் எந்தக் காரியத்திலும், நாம் ஒவ்வொன்றிலும் தேவனுடைய கரத்தைக் காணலாம்!! மேலும் எல்லாச் சமயங்களிலும், எப்பொழுதும், தொடர்ந்து ஜெயமுள்ளவர்களாக நம்மைக் காக்க (2கொரி.12:9) **இப்போது கிருபை** நமக்குக் கிடைக்கிறது. இப்படியாக தேவனுடைய நடத்துதல்களுக்குத் தங்களை ஒப்புவித்தவர்களாய் மாத்திரமல்ல, இந்த லேசான உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்கும் என முழு விசுவாசத்தோடு ஒவ்வொரு பரீட்சையையும் ஏற்றுக்கொள்கிறவர்களாயுமிருக்கிற **அவருடைய மீதியான ஜனங்கள்,** பூமியில் உண்டென்று தேவன் சாத்தானுக்கு நிரூபிக்க முடியும்!!

தேவனுடைய ஞானம், உன்னதங்களில் உள்ள துரைத்தனங் களுக்கும் அதிகாரங்களுக்கும் **சபையின் மூலமாக** தெரியவேண்டும் என்றே புதியஏற்பாடு நமக்குச் சொல்கிறது (எபேசியர்3:10). நமக்கு நேரிடுகிற யாதொன்றும் தற்செயலாய் சம்பவிப்பவையல்ல. மாறாக அவை "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனைப்படியும், அவருடைய முன்னறிவிப்பின்படியும்" (அப்போஸ்தலர்.2:23) விசேஷமான முறையில் திட்டமிடப்பட்டு (நம்மால் தாங்கக்கூடிய, பலத்திற்கு மிஞ்சிப் போகாதபடி) நிர்மானிக்கப்படுகிறது. அதன் இருவித நோக்கங்களாவன: ஒன்று, நம்மை கிறிஸ்துவின் சாயலாய் மாற்றும்படிக்கும்..... அடுத்து, எந்தச் சூழ்நிலையிலும் அவரை நேசித்து விசுவாசத்துடன் கீழ்ப்படிந்து, துதிசெலுத்தும் ஜனங்கள் தேவனுக்கு உண்டென்று, வானமண்டலத் திலுள்ள சாத்தானின் சேனைகளுக்கு தெரிவிக்கும்படிக்குமேயாகும்!!

நாம் சந்திக்கும் ஒவ்வொரு சோதனையும், நமது விசுவாசத்திற்கு ஒரு பரீட்சையேயாகும்! நமக்கு நேரிடுகிற சகல காரியத்தின் விபரங்கள் ஒவ்வொன்றையும் தேவன் அறிவார் என்றும் (யோபு.23:10), அவைகளை தமது சம்பூரண ஞானத்தின்படியும், அன்பின்படியும் திட்டமிட்டார் என்றும், அவரது சர்வ வல்லமை, ஏற்றசமயம் வரும்போது நம்மை விடுவிக்கப்போதுமானது என்றும், மெய்யாகவே விசுவாசிக்கிறோமா? தேவன் உங்களையும், என்னையும் சாத்தானிடம் சுட்டிக் காண்பித்து எந்தச் சூழ்நிலையிலும் தர்க்கிக்காமலும், முறுமுறுக்காமலும் எல்லா வற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செலுத்துகிறவர்கள் இவர்கள் எனச் சொல்லிட முடியுமா?

# 5



## ஆபிரகாம் சோதிக்கப்படுதல்

முதலாவது தேவன் ஆபிரகாமை அழைத்ததற்கு பின், சுமார் 50 வருடங்கள் கழித்து, ஆபிரகாமுக்கு தேவன் "நீ தேவனுக்கு பயப்படுகிறவனென்று 'இப்போது' அறிந்திருக்கிறேன்" எனத் தாமாகவே நற்சான்றிதழைக் கொடுத்த ஒருநாள் அவன் வாழ்வில் வந்தது (ஆதி.22:12). அது வேதாகமப் பாடசாலையின் மலிவான பட்டமோ, அல்லது 'கௌரவ டாக்டரேட் ஆஃப் டிவினிட்டி'யோ அல்லது தற்கால சுவிசேஷகர்கள் நாடித்தேடுகிற அப்படிப்பட்ட மட்டமான சான்றிதழ்களை, ஆபிரகாம் இரண்டு பைசாவுக்கு கூட மதித்திருக்க மாட்டான். அவன் மெய்யானதொன்றை விரும்பினான்! **தன் வாழ்வை அங்கீகரிக்கும் தேவனுடைய நற்சாட்சி...** அதையே பெற்றுக் கொண்டான்!!

அந்த பட்டமளிப்பு நாளுக்காக, மோரியா மலைக்கு ஆபிரகாம் சென்ற பாதை, எளிதானதொன்றல்ல. ஆனாலும் தேவனால் சொல்லப்பட்ட அந்த வார்த்தைகளைக் கேட்ட ஆபிரகாம், சகித்துவந்த அனைத்தும் அதற்குத் தகும்! தேவன் தம் நற்சாட்சியை அவ்வளவு எளிதாகக் கொடுக்கிறதில்லை. 50-வருட காலம் சோதித்தறிந்த பின்பே அவர் கொடுத்தார்!

50 வருடத்திற்கு முன்பு ஆபிரகாம் 75-வயதாய் இருக்கும்போது, தேவன் அவனைக் கல்தேயருடைய 'ஊர்' என்னுமிடத்திலுள்ள சொந்தப் பட்டணத்தையும் உறவினர்களையும் விட்டு, தேவனுடன் அறியாத ஒரு தேசத்திற்கு விசுவாசத்தினால் நடக்க அழைத்தார். அது முதலாவது சோதனை- அதில் அவன் ஜெயம் பெற்றான்! தகப்பன், தாய், சகோதரர்கள், சகோதரிகள் என்பவர் களிடமிருந்து பிணைப்பை முறிப்பது என்பது

அவ்வளவு சாதாரணமல்ல! ஆனால் அவர்களுடன் இணைக்கும் அந்த 'தொப்புள் கொடி' அறுபடாதவரை, நாம் கிறிஸ்துவின் சீஷராக முடியாது (லூக்கா.14:26). ஆபிரகாம் அதில் கீழ்படிந்தான்....

*ஆபிரகாம் தேவனுடைய அழைப்பைப் புறக்கணித்திருந்தால், என்ன நடந்திருக்கும் என்று நான் சிந்தித்து ஆச்சரியமடைகிறேன். நிச்சயமாக தேவன் அவனைக் கட்டாயப்படுத்தியிருக்கமாட்டார். தேவன் அவனைக் கடந்துபோய், வேறு யாரோ ஒருவனைக் கண்டு அழைத்திருப்பார்.*

நாம் ஒருபோதும் ஆபிரகாமைப் பற்றி கேள்விபட்டிருக்க முடியாது. தேவனுக்கு செவிகொடுக்கிற, அந்த யாரோ ஒருவன் விசுவாசத்திற்கு தகப்பனாகவும், மேசியாவிற்கு முன்னோராகவும் ஆகியிருப்பான். அந்த முதலாவது சோதனையில் ஆபிரகாம் தோற்றுப் போயிருந்தால், அவனுடைய இழப்பு எவ்வளவாய் இருந்திருக்கும்! ஊர் என்னுமிடத்தை விட்டு, உறவினர்களின் வாதங்களை எல்லாம் புறக்கணித்து, வெளியேறும்போது, தனக்கு எவ்வளவு பெரிய மகிமையான எதிர்காலத்தை தேவன் திட்டமிட்டிருக்கிறார் என்பதை அவன் அப்போது முற்றிலும் உணரவில்லை!

இன்றும் ஆபிரகாமை அழைத்ததுபோல, தேவன் மக்களை அழைக்கிறார். "என்ன மகத்துவமான விசேஷங்கள்" அழைக்கப்படுகிற வர்களுக்கு கையளிக்கப்படவிருக்கிறது என, தேவ அழைப்பைக் கேட்கும்போது அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. இந்த இருபது நூற்றாண்டுகால சபையின் சரித்திரம், ஆபிரகாமைப்போல, தேவ அழைப்பிற்கு உடனடியாகவும் மகிழ்ச்சியாகவும் முழு மனதாகவும் செவிகொடுத்து, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றிய ஆண்களின், பெண்களின் பிரமிக்கத்தக்க நிகழ்ச்சிகளால் நிரம்பியிருக்கிறது. மற்றும் அழைப்பைப் பெற்றும், செவிகொடுக்காமல் தங்கள் வாழ்வை வீணடித்த மற்றவர்கள் எத்தனைபேர் என நித்தியம்தான் வெளிப் படுத்தும்! அழைப்பைப் பெற்று சோதிக்கப்படும் வேளையில் தவறின வர்களில், தன் செல்வத்தைச் சற்று இறுகப்பற்றும்படிக்கு, இயேசுவைப் புறக்கணித்த அந்த **இளம் ஐசுவரிய பிரபுவும்** அவர்களில் ஒருவன்!

வழக்கமாக, தேவ அழைப்பைப் பெறுவோர், தங்களுக்கு முதலாவது பெருந்தடையாக இருப்பது, தங்களின் மனம் மாறாத அல்லது லௌகீக உறவினர்களாக இருக்கிறதையே பார்க்கின்றனர். இதனிமித்தமே இயேசு கிறிஸ்து "தகப்பன்- தாயை...... வெறுப்பதை" சீஷத்துவத்தின் முதலாவது நிபந்தனையாக வைத்திருக்கிறார். ஆபிரகாம் அந்தப் பரீட்சையில் வெற்றி பெற்றான். ஆயினும் அது ஒரு தரமே நடந்து முடிந்துவிடவில்லை. அவனது தகப்பன், ஊர் என்னுமிடத் திலிருந்து ஆபிரகாம் தொடர்ந்த பயணத்தில் சேர்ந்து கொண்டு, ஆரான் என்னுமிடத்தில் ஆபிரகாமை நிறுத்திக்கொள்ளச் செய்தான் (ஆதி.11:31). தேவனோ, அவனுடைய தகப்பனை மரணத்தின் மூலம்

எடுத்துக் கொண்டு, ஆபிரகாம் இனி ஒருபோதும் அப்படி தடைபடாத படிக்கு இரக்கம் பாராட்டினார். **பின்பு** ஆபிரகாம் கானான் தேசத்திற்குப் பயணமானான்!

நானூறு வருடங்கள் சென்ற பின்பு, இஸ்ரவேலின் புத்திரர்கள் பொன்னினால் செய்த கன்றுக்குட்டியைத் தொழுது கொண்டபோது, லேவியின் புத்திரர்கள் கீழ்காணும் ஒரு முடிவை எடுக்க வேண்டிய தாயிற்று. மோசே மலையிலிருந்து இறங்கிவந்து, "கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக் கடவர்கள்" என்றவுடன், லேவியின் புத்திரர்கள் அவனிடத்திற்கு வந்தார்கள்.... அவர்கள் பாளையத்தினுள் சென்று, பட்டயத்தினால் விக்கிரக ஆராதனைக்காரர்கள் எல்லோரையும், தங்கள் உறவினர்க ளானாலும் விட்டுவிடாமல் வெட்டிப் போடும்படி கட்டளை பெற்றார்கள்! பின்னொரு சமயத்தில், மோசே அவர்களுடைய செய்கையைக் குறித்து "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் நான் உங்களைப் பாரேன் என்று சொல்லித் தன் சகோதரரை அங்கீகரியாமல் தன் பிள்ளைகளையும் அறியாமல்.... அவர்கள் (லேவியர்) உம்முடைய (தேவனுடைய) வார்த்தைகளைக் கைக்கொண்டு உம்முடைய உடன் படிக்கையைக் காக்கிறவர்கள் (ஆகையால்) அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும் இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து...." என்று விளக்குகின்றான்! (உபா.33:9,10).

**யார் தனக்கு ஆசாரியராக இருக்கப்போகிறார்கள்** என்று, அந்த நாளில் தேவன் தங்களை சோதித்தார் என்று இஸ்ரவேலர் அறியாதிருந்தார்கள்! லேவியர்கள் தகுதியுள்ளவர்கள் ஆனார்கள்!! தேவன் அவர்களைத் தம்முடைய ஆசாரியர்களாக நியமித்தார். அது பட்சபாதமான செயல் அல்ல.... தேவன் எல்லா பன்னிரண்டு கோத்திரங்களையும் அந்த சமயத்தில் **சோதித்தார்.** ஒரே ஒரு கோத்திரம் மட்டுமே பரீட்சையில் **வெற்றி பெற்றது.**

தனது உறவினர்களிடமிருந்து விடுபட்ட பின் ஆபிரகாமை தேவன், உலகப்பொருள் சம்பந்தமாக சோதித்தார். இதுவும்கூட சீஷராவதற்கு அவசியமானதொன்றாகும். "தனக்கு உண்டானவைகளையெல்லாம் ஒருவன் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாக மாட்டான்" (லூக்கா.14:33) என இயேசு கூறினார்.

இவ்வுலகப்பொருள் குறித்து, ஆபிரகாம் சோதிக்கப்பட்ட இரு தருணங்களை ஆதியாகமம் 13, 14 அதிகாரங்களில் நாம் வாசிக்கிறோம். முதலாவது, தங்கள் மந்தைகள் மிகவும் பெரிதாகிவிட்டதினிமித்தம் தாங்கள் சேர்ந்திருக்கக்கூடாதெனக் கண்டு அவனும் லோத்துவும் பிரிய வேண்டிய தருணம்.... ஆபிரகாம் மூத்தவனாயிருப்பதாலும், கானான் தேசத்திற்கு அவனே தேவனால் அழைக்கப்பட்டதாலும், தேசத்தை தேர்ந்தெடுக்கும் முதல்வாய்ப்பை அவன் பயன்படுத்துவதுதான்

இலகுவானதும் முறையும்கூட! **ஆனால் சுயநலமின்றி,** தாராள மனதுடன், முதலாவது லோத்து தெரிந்துகொள்ளும்படி ஆபிரகாம் சொன்னான். மனுஷரீதியாக சொல்லப்போனால், லோத்து சிறந்ததைத் தேர்ந்தெடுத்தான் - சோதோம் தேசத்தை!

ஆனால் தேவன் மௌனமாக இந்த நடபடியை - நமது எல்லாப் பண சமாச்சாரங்களை கவனிப்பதுபோல கவனிக்கிறார் என்று ஆபிரகாமோ, லோத்தோ உணரவில்லை! ஆபிரகாமிடம் காணப்பட்ட சுயநலமில்லா தன்மையில் தேவன் மிகவும் பூரித்துப்போய், அவனுடன் உடனடியாகப் பேசி ஆபிரகாமிற்கு நான்கு திசை எங்கும் கண்களை ஏறெடுத்து பார்க்கக்கூடிய தேசம் முழுவதையும் அவனுடைய சந்ததிக்கு சுதந்திரமாகக் கொடுப்பேன் என்றார். லோத்து தெரிந்தெடுத்த பகுதியும் இதில் அடங்கும்! இன்று சுமார் 4000 ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் தன் வார்த்தையைக் காப்பாற்றியிருக்கிறதைப் பார்க்கிறோம். ஆபிரகாமின் சந்ததியார் (யூதர்கள்) ஆபிரகாமிற்கு தேவன் கொடுத்த இடத்தில் வாழ்கின்றனர். ஆனால் லோத்தின் சந்ததியார் (அரபியர்களில் சிலர்) தங்கள் முற்பிதாக்கள் பற்றிக்கொண்டதை இழந்திருக்கின்றனர். இதுதான் தேவனுடைய வழியாகும். சாந்தகுணமுள்ளவர்களே பூமியைச் சுதந்தரிப்பார்கள்!!

உண்மையான தேவ ஊழியக்காரனுக்கு ஏற்ற பெருந்தன்மையுடன் ஆபிரகாம் நடந்துகொள்வதை நாம் மீண்டும் ஆதியாகமம் 14ஆம் அதிகாரத்தில் காணலாம். சோதோம் ராஜாவின் மக்களையும், அவன் பொருள்களையும், அவனுடைய விரோதிகளிடமிருந்து ஆபிரகாம் மீட்டுவிட்டான். சோதோமின் ராஜா எல்லாப் பொருள்களையும் ஆபிரகாமிற்கு சமர்ப்பிக்கிறான். ஆனால், ஆபிரகாம் அவற்றிலிருந்து ஒரு பாதரட்சை வாரைக்கூட ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான். "எனது தேவன் வானத்தையும் பூமியையும் உடையவர்.... உனது எந்தப் பொருளும் எனக்கு வேண்டாம்" என்று கூறுகிறான் (ஆதி.14:22,23).

*இந்த உரையாடலையும்கூட, தேவன் மவுனமாகக் கேட்டார். உடனடியாக ஆபிரகாமிற்குத் தோன்றி, அவன் தேவனாலேயே பலன் அடைவான் என்று சொன்னார் (ஆதி.15:1). நாம் தேவனை கனம் பண்ணினால் நிச்சயம் அவர் நம்மைக் கனம் பண்ணுவார்.*

ஆதாமின் சந்ததியார் பிறரிடமிருந்து பொருள்களை அபகரித்துக் கொள்வதில் திறமைசாலிகள். பலாத்காரமாய் இல்லாவிட்டாலும், இலவசமாய் கிடைக்கிற போதாவது! நமது பண விஷயத்தில், கொடுக்கல் வாங்கல்களிலும், அதுபற்றிய பேச்சு வார்த்தைகளிலும் தேவன் நம்மை சோதிக்கிறார் என்று நாம் உணருவதில்லை. அந்த சூழ்நிலைகளில் நமது நடத்தையைப் பொறுத்தே தேவன் தமது இராஜ்ஜியத்திலும், அவருடைய மீதமுள்ள பூமியின் சேனையிலும் நமது இடத்தை நிர்ணயிக்கிறார்.

ஆபிரகாம், தன் பெற்றோர்கள் விஷயத்திலும், உலகப்பொருள் விஷயத்திலும் சோதிக்கப்பட்டான். இப்போது அவன் தனது மகனைக் குறித்த காரியத்தில் சோதிக்கப்பட வேண்டும்!

தேவனுடைய நற்சான்றிதழைப் பெறுவதற்கு இதுவே அவனுக்கு கடைசி சோதனையாகும். ஈசாக்கை பலியாக கொடுக்கும்படி தேவன் ஆபிரகாமிடம் இரவில் பேசியபோது (ஆதி.22:1), அவன் ஏற்கனவே மக்கள் மத்தியில் தேவ மனுஷன் என்று பெயர் பெற்றிருந்தான் (ஆதியாகமம்.21:22). ஆனால் மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை தேவன் பொருட்படுத்துவதில்லை. தானே ஆபிரகாமை சோதித்தறிய விரும்பினார். ஆகையால் ஒருவரும் கேளாவண்ணம் இரவில் அமைதியாக தேவன் ஆபிரகாமிடம் பேசினார்.

தேவன் ஆபிரகாமிடம் 'கேட்டது' விலையேறப்பெற்ற பொருள்! மறுநாள், அவன் அதைக்குறித்து ஒன்றும் செய்யாமல், தேவனுக்கு கீழ்படியாமல் போனால், அதை ஒருவரும் அறிய வாய்ப்பில்லை. ஆபிரகாம் தனக்கு பயப்படுகிறானா இல்லையா என தேவன் பரீட்சிக்கப்போவது இப்படித்தான்!

தேவன் **நம்மை** சோதித்தறிவதும் இப்படித்தான். அவர் நம்மிடம் பேசும்போது, மிக அமைதியாக, நம்மோடுகூட வசிப்போர்கூட தேவன் நம்மிடம் என்ன சொன்னார் என்று அறியாவண்ணம் நமது இருதயத்தில் பேசுகிறார். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் முற்றிலும் அந்தரங்கமான பகுதியை 'நமது சிந்தனை வாழ்வை' - கொடுத்ததற்கு ஒரு காரணம், நாம் அவருக்கு பயப்படுகிறோமா? இல்லையா? என்று சோதித்தறியவேயாகும். நமது சிந்தனைகள் நமது வார்த்தையைப் போல உரத்த சத்தமுள்ளதானால், நம்மை ஒருவரும் அற்பமாய் எண்ண விரும்பமாட்டோமாதலால், நாமெல்லாரும் நமது சிந்தனையை சுத்தமாகக் காத்துக்கொள்வோம்.

*ஆனால் நமது சிந்தை மிக இரகசியமானதாக தேவன் மட்டும் காணக்கூடியதாக இருக்கிறபடியால், அவருக்கு பயப்படுகிறோமா? இல்லையா? என தேவன் காண்பது எளிது!*

எப்படியென்றால், அசுத்தமான மற்றும் அன்பற்ற சிந்தனைகளில் நாம் லயித்திருக்கும்போது அதை நம் உடன் விசுவாசிகள் தெரிந்துகொள்ள விரும்போமாகில், நாம் தேவனுக்கல்ல மனுஷருக்கே பயப்படுகிறோம் என்பதை அது தெளிவாக நிரூபிக்கிறது. இதுதான், துரதிருஷ்டமாக, மிகப்பெரும்பான்மையான விசுவாசிகளின் நிலைமையாக இருக்கிறது. தேவன் அவர்களை சோதித்தார்! அதில் அவர்கள் தோற்றுப் போனார்கள்!!

யோசேப்பைப் போன்று, இரகசியமாக காம இச்சைக்கு சிக்கும்படி சோதிக்கப்பட்டபோது, "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாயப் பாவஞ்செய்வதெப்படி?"

*(ஆதி.39:9) என யோசேப்பைப் போல் அனுபவங்கள்! எவ்வளவு கொஞ்சமாய் இருக்கிறார்கள்! அப்படிப்பட்ட இளைஞர்கள்தான் தேவனிடமிருந்து நற்சான்றிதழைப் பெறக்கூடியவராவர்!*

*என்னுடைய சொந்தக் கருத்தின்படி, தங்கள் சிந்தனை வாழ்வில், காமத்தைக் குறித்த பரிசுத்தத்தில் முற்றிலும் உண்மையுள்ள விசுவாசிகளின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவேயாகும்! வலது கண் பாவஞ் செய்ததானால் அதைப் பிடுங்கி எறிந்துவிடக் கூடியவர்களும், தங்கள் சிந்தனையில் இச்சை உள்ளவர்களாய் இருப்பதைக் காட்டிலும் மரிக்கக்கூட ஆயத்தமுள்ளவர்களும், தனக்கு உண்டு என தேவன் சாத்தானுக்கு நிரூபித்துக் காண்பிக்க வேண்டுமானால், அது அப்படிப்பட்ட "வெகுசிலரைக்" கொண்டுதான் முடியும். ஜீவனுக்குப் போகும் வழி குறுகலானது அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலரே! ஆனால் அதில் ஆச்சரியமான விஷயம் என்னவெனில், அப்படிப்பட்ட ஒரு சிலர் இருக்கிறார்கள் என்பதே!*

*ஆபிரகாம் சோதனையில் வெற்றி பெற்றான். அவன் மனுஷருக்கு முன்பாக உள்ள அற்பமான சாட்சியைத் தேடவில்லை. அவன்* **தேவனுக்கு,** *அந்தரங்கமான பகுதியிலும் கீழ்ப்படிய விரும்பினான். இதனால் அவன் ஈசாக்கை மறுநாள் காலையில் அழைத்துக்கொண்டு மோரியா மலைக்குப் பயணமானான். அங்கு தனது ஏக சுதனை அர்ப்பணித்ததன் மூலம்* "**கர்த்தாவே நான் பூமியில் மற்ற யாரொருவரைக் காட்டிலும் உம்மையே அதிகமாய் நேசிக்கிறேன்**" *என்று சொன்னான். 'அப்போதுதான்' தேவன் தன் நற்சான்றிதழை அளித்து அவனை அளவில்லாமல் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணினார்.*

*சிந்தையில் சுத்தமாயிருப்பதைக் காட்டிலும்* **உள்ளத்தில்** *(இருதயத்தில்) சுத்தமாயிருப்பது இன்னும் அதிக விசேஷமானது. தேவனேயன்றி வேறொன்றுக்கும் தன் இருதயத்தில் இடங்கொடாதிருப்பதே அது! அநேகர் சுத்தமும் செம்மையுமான வாழ்வு வாழ்ந்த போதிலும், தேவன் தங்களுக்குக் கொடுத்த ஒரு சில வரங்களுடனோ, ஊழியங்களுடனோ, விக்கிரக ஆராதனைக்கு நடத்தும் பிணைப்புகளை கொண்டவர்களாய் இருக்கிறார்கள். தேவன் கொடுத்த ஈசாக்கை பலிபீடத்தின்மேல் திரும்ப தேவனுக்கே அர்ப்பணிக்க அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை!*

*நாம் எதை விரும்புகிறோம்? - தேவனும்* **கூடவே** *சில வரங்களும் அல்லது தேவனும் கூடவே சில ஊழியங்களும் அல்லது தேவனும் கூடவே மனுஷரின் நல் அபிப்பிராயங்களும் அல்லது ஒருவேளை தேவனும் கூடவே நம் சரீர சுகமுமோ? தேவனும் கூடச் சில ஈசாக்குமா? அல்லது* **தேவன் மாத்திரமே** *நமக்குப் போதுமா? இந்த சோதனையில் வெற்றி பெறாத ஒருவரும் அங்கீகரிக்கப்படுவதில்லை! நாம் கர்த்தரை நோக்கி "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" (சங்.73:25)*

என உண்மையிலேயே சொல்லும் நிலைக்கு வந்து சேரும்பொழுது தான், தேவனைப் பொருத்தவரை நாம் தகுதியடைந்தவர்களாகிறோம்!

*நமக்கு அருமையான எல்லாவற்றையும் தேவனுடைய பலிபீடத்தின்மேல் அர்ப்பணித்துவிட்டு தேவனோடு மாத்திரம் தனித்துவிடப்பட்ட, இந்த மோரியா மலையை நாம் ஒவ்வொருவரும் ஏறவேண்டியுள்ளது.*

நமது வருவாய் உயரும்போது அல்லது பதவி உயரும்போது நமக்கு சந்தோஷம் பெருகுமானால், கேட்கக் காதுள்ளவர்களாய் இருப்போமானால்.... நம்முடைய சந்தோஷம் தேவனிலும் கூடவே வருவாயிலும் (அல்லது பதவி உயர்விலும்) இருக்கிறது என்று, தேவன் நம்மோடு பேசுவதைக் கேட்கலாம். அப்பொழுது நாம் கர்த்தருக்குள் (மட்டும்) சந்தோஷமாயிருக்க கற்றுக்கொள்ளும்வரை நமது சந்தோஷத்தை 'சுத்திகரிக்க' வேண்டும். அநேக விசுவாசிகளால் "எப்பொழுதும்" சந்தோஷமாயிருக்க ஏன் முடிவதில்லையென்றால் அவர்களுடைய சந்தோஷம் தேவனிடம் மட்டுமில்லாமல் தேவனிலும் கூடவே ஏதாவதொன்றிலும் இருப்பதினால்தான்.

நமது இருதயம் சுத்தமாய் இருந்தால் - தேவனுக்கு மட்டும் இடமளித்திருந்தால் - நமது சந்தோஷமும் சுத்தமாய் இருக்கும்!

படிப்படியாக ஆபிரகாமைத் தேவன் வழிநடத்தி இந்த சர்வ சமர்ப்பண ஸ்தானத்திற்கு கொண்டுவந்து, இன்று அவன் மூலம், தேவன் பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிக்க முடிந்தது! மோரியாமலை மேலிருந்த ஆபிரகாமின் ஜீவியத்திலிருந்து ஆறுகள் புரண்டோடின!

ஆபிரகாம் அடைந்த ஆசீர்வாதத்தை நாமும் அடைய வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது (கலா.3:14). அதாவது ஜீவத் தண்ணீர் நம் ஒவ்வொருவரிடமிருந்தும் பெருகி ஓடவேண்டும். ஆனால் எத்தனைபேர் அதற்கான கிரயத்தை செலுத்த ஆயத்தமாய் இருக்கின்றனர்? தேவன் சோதிக்கிற வேளையில் எத்தனை பேர் தகுதியடைகின்றனர்?

# 6

## மோசே சோதிக்கப்படுதல்



*"என்னுடைய தாசனாகிய மோசேயோ.... என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்" (எண்ணா.12:7) எனப்பட்ட மோசே, தேவனிடத்தில் நற்சாட்சி பெற்ற வர்களில் மற்றொருவர்! "கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலரில் அப்புறம் எழும்பினதில்லை" என அவனைப் பற்றி அவன் மரித்த சமயத்தில் எழுதப்பட்டிருக்கிறது (உபா.34:12).*

*நாற்பது வருஷம் எகிப்தில் இராணுவப்பயிற்சி பெற்றதால், மோசே அப்படிப்பட்ட மனிதனாகி விட வில்லை. மாறாக நாற்பது வருஷம் வனாந்தரத்தில் ஆடுகளைப் பராமரித்து வந்தபோது, அவனுக்குள் இருந்த* **சுயத்தின் பெலன் தேவனால் முறிக்கப்பட்டதினால்** *அப்படியானான்! எண்பதாவது வயதில், தன் திறமையின் மீதிருந்த நம்பிக்கை எல்லாம் சிதறுண்டு போயிருக்கும் போது, தேவன் மேல் முற்றிலும் சார்ந்தவனாய், தேவ ஜனத்தை விடுதலை பண்ணுகிறவனானான்!!*

*வனாந்தரத்தில் ஆசரிப்புக்கூடாரம் கட்டுவது பற்றி சொல்கிறபோது யாத்திராகமம்.39, 40 அதிகாரங்களில் பதினெட்டு முறை திரும்ப திரும்ப சொல்லப் பட்டிருக்கிற வார்த்தை "கர்த்தர் மோசேக்கு கற்பித்த படியே" என்பதாம். தேவனால் கொடுக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பு ஒரு எளிய சாதாரணத் தோற்றமுடையதாகும். மோசே பார்த்திருந்த, எகிப்தில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான பிரமிடுகளுக்கு ஒப்பிடும்போது அது வெகு தூரமானது. ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பு, மோசேக்கு 40-வது வயதில் அவனுக்குள் இருந்த சுயம் பூரண பலம் வாய்ந்ததாய் இருக்கும்போது கொடுக்கப்பட்டிருக்குமானால், அவன்*

அதை நிச்சயம் மாற்றியமைத்து, கவர்ச்சிகரமான தோற்றமுடையதாய் செய்திருப்பான். ஆனால் எண்பதாவது வயதில் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்யுமளவிற்கு, அவனிடத்தில் சுயம் அவ்வளவாய் செத்திருந்தது. மேலும் அதுவேதான் கர்த்தருடைய மகிமையை கூடாரத்திற்குள் கொண்டு வந்தது!

தெய்வீக ஞானத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நம்முடைய மனுஷீக ஞானம் சிலுவையில் அறையப்பட வேண்டும் (1கொரி.3:18). தேவன் மோசேயை அங்கீகரிக்க வேண்டுமானால் அவனுக்குள்ளிருந்த எகிப்தின் ஞானமாகிய பதரெல்லாம் அடித்து நீக்கப்பட்ட பின்பே, அது சாத்தியமாகும். எருசலேம் வேதாகமப் பள்ளியிலுள்ள இறையியல் பேராசிரியரான கமாலியேலின் பாத படியில் பவுல் மூன்று வருடங்கள் பயின்றான். ஆகையால் அவன் மனந்திரும்பின பின்பு, **தெய்வீக ஞானம்** அடையும்படி தன்னிலிருந்து கமாலியேலின் ஞானம் போரடித்து நீக்கப்பட, அரேபிய வனாந்தரத்தில் மூன்று வருடங்கள் அவன் செலவு செய்ய வேண்டியதாயிற்று!! (கலா.1:17,18). அதன் பிறகுதான் பவுல் கர்த்தருடைய ஊழியக்காரன் என்று, தேவனால் அங்கீகரிக்கப்பட முடிந்தது.

இது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அவ்வளவு முக்கியமான ஒரு பாடம்! ஆனாலும் உண்மையில் சிலரே இதை கற்றுக் கொள்கிறார்கள்!

மோசே, ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்கும்போது, மலை மீது அவனுக்குக் கொடுக்கப்பட்ட அமைப்பின் விபரத்தின்படி அப்படியே நுட்பமாகச் செய்வானோ என தேவன் சோதித்தார். கர்த்தருடைய மகிமை அந்த ஆசரிப்புக்கூடாரத்தின் மேல் வந்தது. மோசேயின் வேலையைப் பற்றிய தேவனுடைய மனநிறைவையே இந்நிகழ்ச்சி வெளிப்படையாகக் காண்பிக்கிறது!

நாம் கர்த்தருக்கென்று கட்டுகிறதில் எப்படி கட்டுகிறோம்? நாம் வேதத்தில் காண்கிற அமைப்பின்படி துல்லியமாக அமைந்துள்ளதா? அல்லது எகிப்தின் ஞானத்தின்படி சிலவற்றை நாம் மாற்றியமைத்து இருக்கிறோமா? அப்படியானால் நம் மத்தியில் கர்த்தருடைய மகிமை காணப்படாததற்கு, நிச்சயம் இதுவேதான் காரணம்!

> *இஸ்ரவேலர் காக்கப்படுவதைவிட, தனது சொந்த கனத்தை மோசே தேடுவானோ என, தேவன் இருமுறை சோதித்தார். மோசேயோ பட்டொளி பறக்க அவ்விரு சந்தர்ப்பங்களிலும் தேர்ச்சி பெற்று வந்தான்!*

பொன்னினால் கன்றுக்குட்டி செய்தபோதிலும்; கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க இஸ்ரவேலர் மறுத்தபோதும்; அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் எதிர்த்து நின்றனர். அவ்விரு சந்தர்ப்பங்களிலும் தேவன் மோசேயிடம் "…. நான் இவர்களை அழித்துப்போட நீ என்னை விட்டுவிடு, உன்னை பெரிய சந்ததியாக்குவேன்" என்றார் (யாத்.32:10), (எண்.14:12).சாதாரண மனிதர்கள் அச்சோதனையில்

*தோற்றுப்போயிருப்பார்கள். ஆனால் மோசே அப்படி அல்ல! அவ்விரு சந்தர்ப்பங்களிலும், அவன் இஸ்ரவேலருக்காக தேவனிடம் மன்றாடினான். ஒரு சந்தர்ப்பத்தில், தான் மரித்துப்போகவும் தன் பெயர் ஜீவ புஸ்தகத்தில் இராதபடி கிறுக்கிப் போடப்படவுங்கூட தயார், ஆனால் ..... இஸ்ரவேல் ஜனங்கள் மட்டும் காக்கப்பட்டால் போதும் என்று விரும்பினான் (யாத்.32:31,32). மெய்யாகவே மோசே கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருந்தான்!*

*மோசேயின் சுயநலமற்ற தன்மையில் தேவன் மிகவும் பூரித்துப் போய், அதன்பின்பு அவர் மோசேயுடன், ஒருவர் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல முகமுகமாய் பேசினார் (யாத்.33:11). மேலும் அவருடைய மகிமையைக் காணும் பாக்கியத்தையும் கூட அவனுக்குக் கொடுத்தார் (யாத்.33:18-23).*

> *ஒரு தேவ ஊழியக்காரனின் மிக முக்கியத் தகுதி என்னவென்றால், அவன் தனக்கானதைத் தேடக்கூடாது. சுய லாபத்தையோ அல்லது கனத்தையோ தேடுவது நமக்குள் ஆழமாய் வேர் கொண்டிருப்பதால், அவைகளினின்று நம்மை விடுவிப்பது தேவனுக்கு ஒரு கடினமான வேலையாகும்.*

*சுயநலத்தை நாடும் நம்முடைய ஆவியைக் கண்டுகொண்டு, அதை நம்மில் நாமே நியாயந்தீர்த்து நம்மை சுத்திகரித்துக் கொள்ளும்படி அவர் நமது சூழ்நிலைகளை ஏற்படுத்தி தருகிறார். சுயநலத்தை நாடுவதிலிருந்து நம்மைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளும்படி, தேவன் தமது வார்த்தையின் மூலமாயும், நாம் கேட்க காதுள்ளவர்களானால் எப்போதும் நம்முடன் தமது ஆவியின் மூலமாயும் பேசுகிறார். இப்படியிருந்தும் வெகுசிலரே திராணியுள்ளவர்களாகி தேவனுடைய நற்சான்றிதழைப் பெறத் தகுதியுள்ளவர்களாகிறார்கள். அப்படிப் பட்டவர்களில் ஒருவனாய் மோசே இருந்தான்! பவுலும், தீமோத்தேயும் மற்ற அந்த இருவர்!! ஆம், அப்படிப்பட்ட அநேகர் இல்லாவிட்டாலும் ஒரு சிலர் இருக்கிறார்கள்.*

*பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மோசேயிடம் கூட இருந்த மெய்யான* **மன்றாடும் ஆவி,** *கிறிஸ்தவர்கள் மத்தியில் அதிகமாய் குறைவுபடுவதற்கு முக்கியக்காரணம், பெரும்பாலும் ஒவ்வொருவரும், இருதயத்தின் ஆழத்தில் ஏதாவதொரு விதத்தில் தனக்கானதைத் தேடுகிறதினால்தான்! இங்குதான் தேவன் நம்மைச் சோதித்தறிகிறார். ஏனென்றால், தனக்கானதைத் தேடுவோரிடம் அவர் தன்னை ஒப்புவிப்பதில்லை!!*

*நாம் மோசேயிடம் காண்கிற மற்றொரு நேர்த்தியான விஷயம் என்னவெனில், அவனைப்பற்றி அவதூறு பேசப்பட்ட போதும் அல்லது அவன் எதிர்க்கப்பட்ட போதும், அவன் நடந்துகொண்ட விதம்.... ஜனங்கள் கலகக்காரர்களாய் 'நமக்கு வேறொரு தலைவனை ஏற்படுத்துவோம்' (எண்.14:5) என்று சொன்னபோது* **மோசே முகங்குப்புற**

**விழுந்து மவுனமாயிருந்தான்.** *தன் பாரிசத்தில் நியாயம் பேச அவன் மறுத்து விட்டான். கோராவும், இஸ்ரவேலின் மூப்பர்கள் 250 பேரும் மோசேயின் தலைமைக்கு விரோதமாக எதிர்த்தபோதும், மோசே மீண்டும் முகங்குப்புறக் கிடப்பதை நாம் பார்க்கிறோம் (எண். 16:4).*

*அவன் தன்னை பாதுகாத்துக் கொள்ளவும் இல்லை, தன் ஸ்தானத்தைப் பற்றிக்கொள்ளவும் இல்லை. தன் அதிகாரத்தை நிலைநாட்டவும் இல்லை.*

*அவனுடைய சொந்த சகோதரியும் சகோதரனும் அவனுக்குப் புறம்பே குறைபேசும்போது, தேவன் அதற்காக தீர்ப்பு செய்ய எத்தனித்த போது, மீண்டும் மோசே முகங்குப்புற விழுந்து அவர்களுக்காக இரங்கும்படி கர்த்தரிடம் மன்றாடுகிறான் (எண்.12:13). அவன் வாழ்ந்த காலத்தில் பூமியின்மேல், மெய்யாகவே மிகவும் தாழ்மையான மனிதனாய் இருந்தான்! தேவன் அப்படிப்பட்டவர்களிடமே தன்னை ஒப்புவிக்க முடியும்!!*

*மற்றவர்களின்மேல் அதிகாரமும், ஆளுகையும் செலுத்துகிற போது, மனிதர்கள் கெட்டுப்போகிறார்கள். ஆனால் மோசே அப்படி கெட்டுப்போகவில்லை. தன்னுடைய மந்தையின் கலகத்தினால், தேவன் மோசேயை திரும்பத் திரும்ப சோதித்துப் பார்த்தார். ஆனால் அந்த பரீட்சைகளிலெல்லாம் மோசே மீண்டும் மீண்டும் வெற்றி பெற்றான்!*

*ஆவிக்குரிய வாழ்க்கையின் தலைமைப் பொறுப்பில் அநேக ஆபத்துக்கள் இணைந்துள்ளன. ஆயினும் மண்ணில் மீண்டும் மீண்டும் முகங்குப்புற விழுந்து, எவ்விதத்திலும் தனக்காக வாதாடாமலும்; தன் உரிமையைப் பாதுகாக்காமலும்; நாவடக்கி இருக்கக் கற்றுக் கொண்டோர் பாக்கியவான்கள்.* **'கர்த்தர்தாமே' தனது ஊழியக்காரர் களுக்காக வழக்காடுவார்** *என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார் (ஏசா.54:17). ஆகையால், அவ்வித காரியங்களை நாம் நமது கரங்களில் எடுத்துக்கொள்ளாமல் தேவனிடமே விட்டுவிடுவது சாலச் சிறந்தது! நீதியாக நியாயம் தீர்ப்பவர் எவரோ அவரிடம் நமது காரியத்தை ஒப்புக்கொடுத்துவிடுவதுதான் நமது ஒரே வேலை!! (1பேதுரு.2:23).*

*ஏசாயா.53:7ல் இயேசுகிறிஸ்து மூன்று முறை மவுனமாயிருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர் பாடுபடும்போது; மயிர் கத்தரிக்கப் படும்போது; அடிக்கப்படும்படி கொண்டு போகும்போது! அவ்வித சமயங்களில் நாம் இயேசுவைப் போலவே மவுனமாயிருக்க கற்றுக் கொள்ளாவிடில் ஆவிக்குரிய தலைமைப் பொறுப்பை நாம் ஒருக்காலும் பெறமுடியாது!!*

*வேதத்தில் தேவ மனுஷர்களின் வாழ்க்கை சரித்திரம் நமக்கு ஊக்கமளிக்கிறதாக இருக்கிறது. எப்படியெனில் அவை இக்காலத்து வாழ்க்கை சரித்திரங்கள் போலில்லாமல், அந்த தேவமனிதர்களின் பலஹீனப்பகுதிகளையும்கூட நமக்கு காண்பிக்கிறது. அநேக தவறுகள் செய்கிற நமக்கு ஒரு தவறும் செய்யாதவன் ஊக்கமளிக்க முடியாது!*

தேவ மனுஷர்களின் தவறுகள் நமக்கு எச்சரிப்பாக இருப்பதற்காகவும் அவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

மற்ற விசுவாசிகளைக் காட்டிலும், தம்முடைய அபிஷேகம் பெற்ற ஊழியக்காரர்களிடம் தேவன் எதிர்பார்க்கும் தரம் மிக மிக உயர்ந்தது. அதிகம் யாரிடம் கொடுக்கப்படுகிறதோ அவர்களிடம் கேட்கப் படுவதும் அதிகமே! இதனால்தான், தேவன் அவிசுவாசமுள்ள இஸ்ரவேலருக்கு கானான் தேசத்தினுள் பிரவேசிக்க அனுமதி மறுப்பதற்கு முன், பத்து வாய்ப்புகள் அளித்தார். மோசேக்கோ அவர் அளித்தது "ஒரே ஒரு வாய்ப்பே."

மோசே விசுவாசமில்லாதவனாய், கீழ்ப்படியாமல் நடந்தபோது அதுவும் மிகச் சொற்ப முறையில் நடந்தபோது.... வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நுழைய, சற்றும் தாமதியாமல் தேவன் அவனுக்கு அனுமதி மறுத்தார் (எண்ணாகமம்.20:8-12).

மோசேயிடம், ஏற்கனவே 40 வருடங்களுக்கு முன், ஒருமுறை 'அடிக்கச்' சொன்ன கன்மலையிடம், தேவன் இப்பொழுது தண்ணீர் வரும்படி 'பேசச்' சொன்னார் (யாத்.17:6). ஆனால் மோசே உணர்ச்சிவசப்பட்டவனாய் நிதானமிழந்து கன்மலையை **அடித்தான்** (எண்.20:10). தேவ மனுஷன் கீழ்ப்படியாமல் போனபோதும், தண்ணீர் புறப்பட்டு வந்தது. அது, தேவன் தாகமாயுள்ள ஜனங்களை நேசித்தார் என்பதைத்தான் நிரூபித்தது. தேவ மனுஷனுடைய கீழ்ப்படியாமையை, அது அனுமதித்ததாக எண்ண முடியாது. தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போகும் தேவனுடைய மனிதர்களின் ஊழியங்களில் கூட ஏன் ஆசீர்வாதம் தங்குகிறது என்பதை இது விளக்குகிறது!

ஆனால் தண்ணீர் பொங்கி வந்ததினால், மோசே தப்பித்துக் கொள்ள முடியாது! அவன் கடுமையாக தண்டிக்கப்பட்டான்!! கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் நாளுக்காக அவன் 40 வருடங்கள் நோக்கமாயிருந்தும், கானான் தேச எல்லையில் "தானே" பிரவேசிக்கிற தகுதியை இழந்தான். மற்றவர்களுக்குப் பிரசங்கித்தும், ஒருவன் தன் தகுதியை வாழ்வின் முடிவில் கூட இழந்துபோவது சாத்தியமே! (1கொரிந்தியர்.9:27).

இஸ்ரவேலர் தேவனுடைய செய்கைகளை மட்டும் காண முடிந்தது. ஆனால் **அவருடைய வழிகளை அறியும்** சிலாக்கியத்தை மோசே பெற்றிருந்தான் (சங்கீதம்.103:7). ஆதலால், இஸ்ரவேலரைக் காட்டிலும் அவனிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது.

*தேவ ஊழியர்களின் சிலாக்கியங்கள் அநேகம். அந்த அளவிற்கு அவர்களுடைய பொறுப்புகளும் அதிகம்.*

தேவன் தன்னைச் சோதிக்கிறார் என மேரிபாவில் மோசே உணரவில்லை. அவன் அறிந்திருந்தானானால், வெகு ஜாக்கிரதையாக இருந்திருப்பான். நமது நினைவுகளையும் செய்கைகளையும் நிறுத்துப்

*பார்க்கும்படி, அனுதினவாழ்வில் நாம் சந்திக்கும்* **சூழ்நிலைகளால்** *தேவன் நம்மை சோதிக்கிறார் என நாம் உணர்வதில்லை! நமது ஊழியங்களில் ஜீவத்தண்ணீர் புறப்பட்டு ஓடினாலும்கூட, நமது தனிப்பட்ட வாழ்வைக் குறித்து ஒருநாள் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் பதில் சொல்லியாக வேண்டும்!!*

*மோசேயின் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, தேவன் தம்முடைய ஊழியக்காரர்களிடம் விதிக்கும்* **தளரா நிபந்தனைகளைக்** *குறித்து ஒரு முன் அறிவிப்பைக் கொடுத்திருந்தார். இஸ்ரவேலின் மீட்பராக மோசேயை அழைத்த சில காலத்திலேயே, அவனுடைய மகனுக்கு* **விருத்தசேதனம் பண்ணாத கீழ்படியாமையினிமித்தம்,** *கிட்டதட்ட அவனுடைய ஜீவனையே எடுத்துவிட்டார். தன்னுடைய புறஜாதியான மனைவியின் விருப்பத்திற் கிணங்க அவன் தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்யவில்லை. ஆனால், தேவன் மோசேயினிடத்தில் கீழ்ப்படியாமையை எவ்விதத்திலும் சகிக்க வில்லை (யாத்.4:24-26). தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற அந்தச் சமயத்தில் பூமியின்மேல் மிக முக்கியமானவனாய் மோசே இருந்த போதும்கூட, அது தேவனிடத்தில் ஒரு வித்தியாசத்தையும் கொண்டுவர முடியாது! மோசே தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருந்தால், அவனுடைய ஜீவனையும்கூட எடுத்திருப்பார். தேவனிடம் பட்சபாதமில்லை!!*

*கானான் தேசத்தினுள் இஸ்ரவேலரை நடத்திச்செல்லும் சிலாக்கியத்தை தேவன் மோசேக்கு மறுத்துவிட்டாலும்கூட, எல்லா இடங்களிலும் உண்மையாய் இருந்த தேவ ஊழியனாக அவன் இருந்ததால், 1500 வருடங்களுக்குப்பின், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் அவன் பிரவேசிக்கவும், மறுரூப மலையில் கிறிஸ்துவுடன்கூட அவன் நிற்கவும் கிருபையாய் தேவன் அவனுக்கு அனுமதித்தார்! (மத்.17:3).*

*தேவன் நீடிய சாந்தமும் மன உருக்கமும் உள்ளவரானதால், ஒருவனுடைய அன்பின் பிரயாசமான தியாகங்களை மறந்துவிட, அவர் அநீதியுள்ளவரல்ல! (எபிரெயர்.6:10). ஆனால் அவர் மிகவும் கண்டிப்பானவரும்கூட!! (ரோமர் 11:22).*

*நாம் பயத்துடனும் பக்தியுடனும் தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்யும்படி (எபி.12:28,29) கட்டளை பெற்றிருக்கிறோம். உத்தம ஊழியக்காரராக உங்களை நீங்கள் தேவனுக்கு முன் நிறுத்தும் படி ஜாக்கிரதையாய் இருங்கள்! (2தீமோ.2:15).*

# 7



## தாவீது சோதிக்கப்படுதல்

*"என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்கு சித்தமானவைகளை எல்லாம் அவன் செய்வான்" (அப்.13:22) என தாவீதைக் குறித்து தேவன் சொன்னார்.*

*இஸ்ரவேலுக்கு அரசனாக தேவன் முதலாவது தெரிந்தெடுத்தது சவுலாகும். ஆனால் தேவன் வைத்த இரு சோதனைகளிலும், பொறுமையில்லாதவனாகவும் (1சாமு.13), கீழ்ப்படியாதவனாகவும் (1சாமுவேல்.15) சவுல் தோற்றுப் போனான்! இதனிமித்தம் தேவன் இராஜ்ஜியத்தை அவனிடமிருந்து பிரித்து தாவீதிற்கு கொடுத்தார்.*

*சாமுவேலினால் அரசனாக அபிஷேகம் பண்ணப் பட்டதிலிருந்து, தாவீது சிங்காசனத்தில் உண்மையாய் அமரும் வரை அவன் நடந்து சென்ற பாதை நீண்டதும் கடுமையானதுமாகும். அந்த எல்லா வருடங்களிலும், பலவிதங்களில் சோதிக்கப்பட்டு அவன் தகுதியுள்ளவனானான்!*

*சிறு ஆட்டிடையனாக, தனது வீட்டிலும் வேலை செய்யுமிடத்திலும் அவன் உண்மையுள்ளவனாய் நடந்து கொண்டிருக்கும்போதே (1சாமு.16:11) தேவன் தாவீதை அழைத்தார். தாவீதைக் குறித்த முதல் காரியமாய் இதைத்தான் பார்க்கிறோம். இயேசுகிறிஸ்து எப்படி தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றார் என நாம் காண்கிற வேளையிலும் இதையே நாம் பார்த்தோம்.* **ஒருமுறைகூட வேலையில்லாத எந்த மனிதனையும் இயேசு ஊழியத்திற்கு அழைத்ததில்லை.** *சுவிசேஷத்தில் விவரிக்கப் பட்ட ஒவ்வொரு அப்போஸ்தலரும், அவர் தம் வேலை ஸ்தலத்திலிருந்தே அழைக்கப்பட்டனர்! இந்த தாற்பரியமே* **இன்றும்** *பிரயோகிக்கப்படுகிறது. இந்தியாவில் கிறிஸ்தவ பணியின் கவலைக்கிடமான நிலை என்ன*

வெனில், இன்று முழுநேர கிறிஸ்தவ பணியில் இருக்கும் பெரும் பாலோர் 'கடந்த காலத்தில்' ஒருபோதும் உலகப்பிரகாரமான வேலையில் இருந்ததில்லை! இந்த ஒரு உண்மை மட்டுமே தேவன் தமது ஊழியத்திற்கு அவர்களை எப்போதாவது அழைத்தாரா? என்ற சந்தேக கேள்விக்கு இடமளிக்கிறது. நமது உலக வாழ்விலுள்ள சாதாரண வேலையில் உண்மையுள்ளவர்களாய் இருப்பதை தேவன் மிக முக்கியமானதாய் கருதுகிறார்! இதுதான் அவரது ஊழியத்திற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கிட முடியும்!!

இரண்டாவதாக தாவீதிடம் நாம் காணும் குணாதிசயம், தேவனுடைய நாமத்தின் மகிமையைக்குறித்த அக்கறையே ஆகும். கோலியாத் இஸ்ரவேலின் சேனையை அலட்சியம் செய்தபோது, தாவீதை அந்த அரக்கனை எதிர்த்து சவாலிடத் தூண்டியது.... சாதனைகள் புரிய வேண்டும் எனக் கொண்ட சில அற்ப ஆசைகள் அல்ல, மாறாக தேவனுடைய நாமத்தின் மகிமையின் மேல்கொண்ட அக்கறையினால்தான் (1சாமு.17:26).

*தேவனுடைய மெய்யான ஊழியக்காரனுக்கு அடையாளமாவது என்ன வென்றால், அவனுடைய எண்ணத்தில், தேவநாமத்தின் மகிமையின் மேல் கொண்ட பற்றே மேலோங்கியிருக்கும்.*

*மத்தேயு.6:9ல்* காணப்படுகிறபடி, உமது நாமம் பரிசுத்தப்படுவதாக என்பதே அவனிடமிருந்து 'தானாகவே' எழும்பும் முதல் ஜெபமாக இருக்கும் - தனிப்பட்ட சௌகரியம், பாதுகாப்பு போன்ற மற்ற எல்லாம் அவனுக்கு இரண்டாவதேயாகும். இந்த விஷயத்தில் தேவன் நம் எல்லோரையும் பலதரப்பட்ட சூழ்நிலைகளில் சோதிக்கிறார். ஒரு சிலரே இந்த பரீட்சையில் தேறுகின்றனர். அப்படி தேறினவர்களில் தாவீதும் ஒருவன்!

தேவ நாமத்திற்குரிய கனத்தைக்குறித்து தாவீது கொண்டிருந்த வைராக்கியம் மிகவும் பலமாக இருந்ததால், தேவன் நிச்சயம் உதவி செய்வார் என்ற "**விசுவாசம்**" அவன் இருதயத்திற்குள் வந்து எல்லா பயத்தையும் விரட்டியடித்தது. தாவீதைப்போல நாமும் தேவநாமத்தின் மகிமைக்காக வைராக்கியமுள்ளவர்களானால், நாமும்கூட பயத்தை விரட்டும் அதே விசுவாசத்தைக் கண்டுகொள்ளலாம். கோலியாத்து களை கொன்று போடலாம்! ஆனால் நாமோ, தேவ மகிமைக்கான வைராக்கியம் நமக்குள் மிகவும் சொற்பமாய் இருப்பதினிமித்தம், விசுவாசத்துடன் முன் செல்லாது, பயத்துடன் பின்தங்கி விடுகிறோம்.

கோலியாத்தைக் கொன்றதினால் தாவீதின் சோதனைகள் முற்றுப் பெறவில்லை. அவைகள் அப்பொழுதிலிருந்துதான் ஆரம்பித்தன. **தாவீதின் புகழின்மேல் சவுல் பொறாமை கொண்டு** அவனைக் கொல்லும்படி இஸ்ரவேலெங்கும் தேடித்திரிந்தான்! தாவீது ஒரு பட்டணத்திலிருந்து மறுபட்டணத்திற்கும், ஒரு குகையினின்று மறு குகைக்கும் ஓடுகிறான்.

இரு சந்தர்ப்பங்களில் சவுல் தனியாக தாவீதின் வசம்.... முற்றிலும், தாவீதின் தயவில் இருந்தான். தாவீது அவனை எளிதாய் கொன்றுபோட்டிருக்க முடியும். உண்மையில் தாவீதின் நண்பர்கள் அப்படிச் செய்யும்படியே சொன்னார்கள். ஆனால் தாவீது மறுத்துவிட்டான். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட அரசனை - அந்த அரசன் பின்வாங்கிப் போனவனாயிருப்பினும் - தாவீது அவனைத் தொடவில்லை. ஆம், சவுலிடமிருந்து சிங்காசனத்தைப் **பிடுங்கிக்கொள்ள** தாவீது விரும்பவில்லை. தேவன் தமக்கேற்ற சமயத்தில் தன்னை சிங்காசனத்திலேற்ற அவரால் முடியும் என்று அவன் விசுவாசித்தான்! தேவனுடைய சர்வ ஆளுகையின் மேல் தாவீதுக்கு இருந்த விசுவாசம், கோலியாத்தைக் கொல்ல தேவன் உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார் என்ற விசுவாசத்தைக் காட்டிலும் பெரியது.

சவுல் தாவீதின் தயவில் கிடந்தபோது, தாவீது தேவனால் சோதிக்கப் பட்டான் - ஒருமுறை அல்ல இருமுறை!! (1சாமு.24:3-7, 26:6-12) ஒவ்வொரு முறையும் அவன் வெற்றி பெற்றான். **பழி வாங்குதல் கர்த்தருக்கு மட்டுமே உரியது** என அவன் அறிந்திருந்ததால், அவன் பழிவாங்க விரும்பவில்லை. தீமையை நன்மையால் வெல்லவே விரும்பினான் (ரோமர்.12:19-21). தன்னை தேவன் ஏற்கனவே அபிஷேகம் செய்து தகுதிப்படுத்திவிட்ட சிங்காசனத்தைக் கைப்பற்றும்படி சவுலைக் கொல்லவுமில்லை. தேவன் நமக்குத் தருவேன் என்று வாக்குப்பண்ணின ஒரு காரியத்திற்கு காத்திருப்பது, நமது விசுவாசத்திற்கும் பொறுமைக்கும் உண்மை யிலேயே ஒரு சோதனையாகும். தேவனுக்கு காத்திருந்ததாலும்; நம்பியிருந்ததாலும்; தாவீது ஒன்றும் இழந்துவிடவில்லை. தாவீதின் 30-ஆம் பிறந்தநாள் நிறைவேறின உடனே தாவீதை அரசனாக்க தேவன் திட்டமிட்டிருந்தார்! தேவன் திட்டமிட்டபடி சூழ்நிலைகளும் அப்படியே துல்லியமாய் நடந்தேறின (2சாமு.5:4). தாம் குறித்த நேரத்தில் தேவன் ஒருவனைச் சிங்காசனத்தில் அமரப்பண்ண அவர் வல்லவராயிருக்கிறார் என யோசேப்பின் சரித்திரத்திலிருந்து தாவீது அறிந்திருந்தான்!

யோசேப்பை மிகுந்த சோதனை நிறைந்த சூழ்நிலைகளில் பல வருடங்கள் கர்த்தருடைய வார்த்தை புடமிட்டது (சங்கீதம்.105:18,19). ஆனால் யோசேப்பின் முப்பதாவது பிறந்தநாள் நிறைவேறின உடனே கர்த்தருடைய வேளை வந்தது. அவன் எகிப்து தேசத்தின் இரண்டாம் அதிபதியானான் (ஆதி.41:46).

*அவனுடைய சகோதரனின் பொறாமையோ, போத்திபார் மனைவியின் குற்றச்சாட்டோ, யோசேப்பின் வாழ்வைக் குறித்த தேவனுடைய திட்டத்தை நிறைவேறாமல் தடுத்து நிறுத்த முடியவில்லை!*

தேவனுடைய சித்தம் நிறைவேறுவதை ஒருநாள்கூட தாமதப் படுத்த அவர்களால் உண்மையிலேயே முடியவில்லை!

*யோசேப்பின் சரித்திரத்தை தாவீது படித்திருந்தான். இப்போது தனது சொந்த வாழ்விலும் தேவன் உண்மையுள்ளவரென்பதையும், சர்வவல்லவர் என்பதையும் நிரூபிக்க வைராக்கியமுள்ளவனாய் இருந்தான். மேலும் யோசேப்புக்கு தேவன் எதைச் செய்தாரோ, அதையே தேவன் தனக்கும் செய்வார் என்பதை தாவீது கண்டான்.*

*யோசேப்பு, தாவீது மற்றும் அநேகருக்கும் தேவன் செய்ததுபோல அவர் நமக்கும் செய்வார் என்ற விசுவாசம் நம்மில் உள்ளதா? என்பதே இப்போது கேள்வி. இங்குதான் நமது விசுவாசம் சோதிக்கப்படுகிறது. உதாரணமாக, தேவன் உங்களுக்கு நியமித்துள்ள வாழ்க்கைத்துணை, நீங்களாகவே அபகரித்துக்கொள்ளாமலும் அல்லது மாம்சப் பிரகாரமாக நாடாமலும் உங்களுக்கு வந்து சேரும் என விசுவாசிக்கிறீர்களா? அதுபோல, உங்களுக்காக நியமிக்கப்பட்ட வேலை, வீடு மற்றும் பூமியில் நாம் வாழத் தேவைப்படும் மற்றெல்லா பொருட்களைக் குறித்தும் அப்படி விசுவாசிக்கிறீர்களா? நமக்கு அப்படிப்பட்ட தேவைகள் ஏற்படும்போதுதான் நமது விசுவாசம் சோதிக்கப்படுகிறது. தனக்காக கிரியை செய்யும்படி* **கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள்** *ஒருபோதும் வெட்கப்படுவதில்லை! (ஏசா.49:23, ஏசாயா.64:4). அவர்கள் எதையும் அபகரித்துக்கொள்ளாமல், எப்போதும் மிக்க நலமானதையே பெற்றுக்கொள்வார்கள்!*

*புத்திர சுவீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி தன் தகப்பனை வஞ்சித்த யாக்கோபின் காரியம் எவ்வளவு வேறுபட்டிருக்கிறது? இந்தக் காரியத்தை தேவனிடம் விட்டுவிட்டு யாக்கோபு அவரை நம்பி இருந்திருந்தால், அவன் பொய் சொல்லாமலே அந்த புத்திர சுவீகாரத்தைப் பெற்றிருப்பான். யாக்கோபு அதைத் தவறான வழியில் பெற்றதினால், அடுத்த 20-வருடம் அவன் தன் வீட்டைவிட்டு தொலைவில் சென்று கஷ்டப்பட்டான்.*

*இந்த சம்பவங்கள் எல்லாம், நாம் ஒருபோதும் அவிசுவாசமுள்ளவர்களாய் நடந்து கொள்ளாதபடி நமது போதனைக்காகவும் எச்சரிப்புக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது!*

*அலுவலகத்தில் இக்கட்டான சூழ்நிலையில் தப்பித்துக்கொள்ள நாம் பொய் சொல்லும்படி சோதிக்கப்படும்போது, அச்சோதனையைத் தள்ளி, நமது சூழ்நிலையை அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார் என நம்பி நாம் அவரை கனப்படுத்திட முடியும். உண்மையைச் சொல்லி தேவனை கனம் பண்ணினால், நீங்கள் ஒருபோதும் தோல்வி அடையவே மாட்டீர்கள். ஒரு அற்பபொய்யைக் காட்டிலும், தேவன் அதிக வல்லமையுள்ளவர். ஒரு பொய் உங்களை விடுவிக்கக் கூடுமானால், தேவனால் எவ்வளவு அதிகம் கூடும்!*

*நமது வேலை உயர்வு கிழக்கிலிருந்தோ, மேற்கிலிருந்தோ வராமல் (ஏதோ சந்தர்ப்பத்தினால் அல்ல) அல்லது எந்த மனுஷனாலுமல்ல, ஒருவனைத் தாழ்த்தி மற்றொருவனை உயர்த்துகிற* **தேவனிடத்திலிருந்தே**

*வருகிறது (சங்.75:6,7). ஒரு அறியப்படாத யோசேப்பையும், தாவீதையும் உண்மையுள்ளவர்களென சோதித்தறிந்தபின், இராஜாதிபதிகளாக உயர்த்துவது என்பது தேவனால் மாத்திரமே சாத்தியமாகக் கூடிய காரியம்!*

*தன்னுடைய அனுபவங்களைக் குறித்து தாவீது பின்னொரு சமயத்தில் "தேவனே எங்களைச்* **சோதித்தீர்;** *வெள்ளியைப் புடமிடுகிறது போல* **புடமிட்டீர்;** *எங்களை வலையில் அகப்படுத்தி எங்கள் இடுப்புகளின் மேல் வருத்தமான* **பாரத்தை ஏற்றினீர்;** *மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம். செழிப்பான இடத்தில் எங்களை கொண்டுவந்து விட்டீர்" என்கிறான் (சங்கீதம்.66:10-12).*

*தாவீதின் பாத்திரம் நிரம்பி வழிந்து ஓடியதும் இப்படித்தான் சங்.23:5ல், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்பதற்கு உபயோகித்த அதே எபிரெய வார்த்தையை, சங்கீதம் 66:12லும் செழிப்பான இடத்தில் கொண்டுவந்து விட்டீர் என சொல்லும்போது தாவீது உபயோகிக் கிறான்!*

*தேவனுடைய அடிப்படை நோக்கம் என்னவெனில், நம்மிலிருந்து இடைவிடாமல் ஜீவத்தண்ணீர் ஆறாகப் பெருகி வழிந்தோடும் மகிமையான சுதந்தரத்திற்கு நம்மை கொண்டுபோய் சேர்ப்பதேயாகும்!*

*ஆகிலும், நம்மை முதலில் பரீட்சிக்காமல் அங்கு கொண்டு செல்லவே முடியாது. நம்மை நெருப்பினூடேயும், தண்ணீரினூடேயும் கொண்டு செல்வார். மனிதர் நம்மை அவதூறு செய்யவும், தகாதவிதமாய் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதிப்பார்! நமது நடவடிக்கை களையும் ஊழியங்களையும் வலையில் அகப்படுத்துவதுபோல் அடைத்துப் போடுவார். இந்த எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்று கவனிப்பார். நாம் தாழ்மையாகவும், சந்தோஷமாகவும் தேவன் நமது வாழ்வில் கட்டளையிட்டதை ஏற்றுக்கொள்வோமானால், அவர் நம்மை நிச்சயம், பெருகி வழிந்தோடும் பூரண நிறைவிற்கு* **கடைசியாகக் கொண்டுவருவார்!**

*நாம் கடைசியாக தாவீதின் குணநலத்தில் கவனிக்கக் கூடிய அம்சம், தான் அரசனான பின்பும்கூட, அவன் தன்னைத்தான் நியாயந்தீர்த்துக் கொள்ளத் தயாராய் இருந்த காரியமே! பத்சேபா ளோடு அவன் பாவத்தில் விழுந்த பின்பு, அந்தப் பாவத்தின் கடுமையை அவன் உடனடியாக உணரவில்லை. பிறகு தீர்க்கதரிசி நாத்தான் வந்து அவனுடைய பாவத்தின் நிமித்தம் கடிந்துகொண்ட வேளையிலே, தாவீது தனது தவறை தாழ்மையுடன் ஏற்றுக்கொள்வதைக் காண்கிறோம் (2சாமு.12:13). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த தாவீதுடன் நாம் நம்மை ஒப்பிடக்கூடாது. அவன் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கவில்லை. தேவன் நம்மிடம் இப்பொழுது கிருபையின்*

*காலத்தில் எதிர்பார்க்கும் தரமோ மிக அதிகமாகும் (மத்.5:28,29). ஆனால் தாவீது பாவத்தைக் குறித்து குற்ற உணர்வடைந்தபின், எப்படி நடந்துகொண்டான் என்பதிலிருந்து, ஒரு பயனுள்ள பாடத்தைக் கற்றுக்கொள்கிறோம்.*

*மனுஷரீதியில் சாதாரணமாய் எண்ணப்படும் குற்றத்தைப் புரிந்த சவுலிடமிருந்து 'இராஜ்யபாரத்தை' தேவன் ஏன் எடுத்தார்? மேலும் அதைவிட மாபெரும் பாவங்கள் என எண்ணப்படும் விபச்சாரமும், அதைத் தொடர்ந்து கொலையும், தாவீது செய்தபின்பும், தேவன் அவனை அரசனாக இருக்கும்படி ஏன் அனுமதித்தார்? இதற்கு பதில்: இந்த இரண்டு மனிதர்களும் தங்கள் பாவத்தை அறிந்தவுடன், அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதிலேயே இருக்கிறது. சவுல் சாமுவேலிடம் 'அந்தரங்கமாக' தன் பாவத்தை ஒப்புக்கொள்கிறான். ஆனால் ஜனங்கள் முன், தனக்கு மரியாதையைத் தேடுகிறான் (1சாமு.15:30). அவன் பாவஞ்செய்தான், இருப்பினும் மனுஷருடைய கனத்தையும் எதிர்பார்க்கிறான்! தாவீதோ அப்படியல்ல, தன் பாவங்களை மறைக்கப்பார்க்காமல் எல்லோரும் அறியும் வண்ணம் சங்கீதம் 51-ஐ எழுதி வெளிப்படையாக ஏற்றுக்கொண்டான்!!*

*இவ்விரு மனுஷரை தேவன் நடத்திய முறையினின்று நாம் என்ன கற்றுக்கொள்கிறோமெனில்:* **மனுஷருடைய மரியாதையைத் தேடுவது....** விபச்சாரம், கொலை போன்ற பாவங்களிலும்.... மிகப்பெரிய பாவமாக *தேவனுடைய பார்வையில் காணப்படுகிறது. இதனால்தான் சிலுவையிலிருந்த கொலையாளியையும், விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயையும் இயேசுவால் மன்னிக்க முடிந்தது. ஆனால் மனுஷருடைய மகிமையைத் தொடர்ந்து தேடின பரிசேயர்களை அவரால் மன்னிக்க முடியவில்லை. மனுஷருடைய கனத்தைத் தேடுவது ஒருவகையில் விக்கிரக ஆராதனையாகும். மேலும், கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் சோதித்துப்பார்ப்பது, அதிகமாக இந்தப் பகுதியிலேதான்! இந்தச் சோதனையில் வெற்றி பெறுவோர் பாக்கியவான்கள்!!*

*நமது சென்றகாலத் தோல்விகளை - நாம் தாழ்மையாக ஏற்றுக் கொள்ள சம்மதிப்போமானால் - தேவனுடைய நோக்கத்தை நாம் நிறைவேற்ற அவை நமக்கு தடையாய் இருப்பதில்லை! ஏனெனில், தாழ்மையுள்ளவர்களுக்கே தேவன் கிருபை அளிக்கிறவராயிருக்கிறார்!!*

# 8



## எலிசாவும் கேயாசியும் சோதிக்கப்படுதல்

*இஸ்ரவேலின் சிறந்த தீர்க்கதரிசியான எலிசாவை தேவன் அங்கீகரித்ததின் அடையாளமாக, எலியா பெற்றுக்கொண்டது போல் இருமடங்கு அபிஷேகத்தை அவன் மேல் அனுப்பினார். இதோ, தேவனால் சோதிக்கப் பட்டு, அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு மனிதன்!*

*மற்ற எல்லா மெய்யான தேவ ஊழியர்களைப் போலவும் எலிசா விஷயத்திலும், அவன் தனது லௌகீகத் தொழிலை உண்மையுடன் செய்து வந்த போது அழைக்கப்பட்டான் (1இரா.19:19). அதன்பின்பு அவன் எலியா தீர்க்கதரிசிக்கு பல வருடங்கள் எடுபிடி வேலை செய்து வந்தான் (2இரா.3:11). அவன் தனக்குப் பெரிய காரியங்களை தேடவில்லை, ஆகிலும் தேவனோ அந்த வாலிபனுக்குப் பெரிய திட்டங்களை வைத்திருந்தார்.*

*எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பாக, எலிசா சோதிக்கப்பட வேண்டும். ஆதலால், தான் மட்டும் பெத்தேலுக்குச் செல்லத் தீர்மானித்து எலிசாவை கில்காலிலே நின்றுவிடும்படி எலியா கூறுகிறான். ஆனால் ஒரே தீர்மானத்துடன் எலியாவைத் தொடரும்படி முடிவெடுத்திருந்த எலிசா, நின்றுவிட மறுத்து விடுகிறான். பெத்தேலிலே எலிசாவை தன்னை விட்டு உதறிவிட மீண்டும் முயற்சித்து, தான் இன்னும் எரிகோவுக்குச் செல்லவேண்டுமென கூறினான். ஆனால் எலிசா "அட்டையைப்" போல ஒட்டிக் கொண்டான். கடைசியாக எரிகோவிலும் எலிசா அதேவிதமாக சோதிக்கப்படுகிறான்.* **மீண்டும் எலிசா "இடைவிடாமல் தொடரும் சோதனையில்" வெற்றி பெற்று** *எலியாவைப் பின் தொடர்ந்து யோர்தான்வரைச் செல்லுகிறான் (2இரா.2:14). தனது வாழ்க்கைக்கு, தேவனிடத்திலிருந்து மிகச் சிறந்த*

தொன்றை **இருமடங்கு அபிஷேகத்தை** அவன் இப்படியாகப் பெற்றான்.

நமக்கு இதில் என்ன செய்தி அடங்கியிருக்கிறது? ஆவிக்குரிய வளர்ச்சியில் பல நிலைகள் இருக்கின்றன. அவைகளில், நாம் ஏற்கனவே பெற்றுவிட்டதில் திருப்தி அடைந்துவிட்டோமா அல்லது தேவனுடைய அதி உன்னதத்திற்கு நாம் தொடருகிறோமா என தேவன் சோதித்துப் பார்க்கிறார். அநேகர் கில்கால் எனப்பட்ட "பாவமன்னிப்பைக் குறிக்கும்" இடத்திலேயே நின்றுவிடுகிறார்கள் (யோசுவா.5:8,9). வேறு சிலர் புதிய ஏற்பாட்டு ஒழுங்கின்படியான சபை அல்லது தேவனுடைய வீடு எனப்படும் பெத்தேல் வரை தொடருகின்றனர் (ஆதி.28:19,22). வேறுசிலர் இன்னும் தொடர்ந்து எரிகோ எனப்படும் தேவனுடைய அற்புத வல்லமையை நாடும் இடம்வரை (யோசுவா.6:20) செல்கின்றனர். வெகு சிலரே யோர்தான் எனப்படும் கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்குள்ளாகி (சுயத்திற்கு மரித்து) கிறிஸ்து தன் மாம்சத்தின் வழியாய் ஏற்படுத்தின புதிதும் ஜீவனுள்ளதுமான **சிலுவை வழியில் நடக்கின்றனர்.** ஆனால், இப்படி கடைசிவரை வந்து, சுயத்திற்கு முழுவதும் செத்து, முழுமனதுடன் பின்தொடர்பவர்களே தேவனுடைய சிறந்ததான இருமடங்கு பங்கைப் பெறுவர்.

நாமெல்லாரும் இன்று, எத்துடன் நின்றுவிடுவோமென்றே சோதிக்கப்படுகிறோம்.

*எலிசாவுக்கு கேயாசி எனப்படும் எடுபிடி வேலையாள் இருந்தான். எலியாவுக்குப் பின் தீர்க்கதரிசியான எலிசா தோன்றினது போல எலிசாவுக்குப் பின் அடுத்த தீர்க்கதரிசியாக கேயாசி வரவேண்டும் என்பது தேவ தீர்மானம். ஆனால் முதலில் கேயாசி சோதிக்கப்பட வேண்டும்.*

சீரிய நாட்டு சேனாதிபதி நாகமான் எலிசாவிடம் வந்து தனது குஷ்டரோகம் குணமடைந்தபோது அந்தச் சோதனை நடந்தது. தனக்குக் கிடைத்த சரீர சுகத்திற்கு நன்றியறிதலாக நாகமான் எலிசாவுக்கு ரூபாய் எட்டு இலட்சங்கள் பெறுமான தங்கமும், வெள்ளியும், பத்து சீரிய நாட்டு ஆடம்பர உடைகளையும் கொடுத்தான். ஆனால் எலிசா ஒரு கணப்பொழுதுகூட தயக்கமில்லாமல் அந்த அன்பளிப்பை மறுத்து விட்டான். அவிசுவாசியும், சூழ்நிலைக்கு ஏற்ப மாறுகிறவனுமான நாகமானிடமிருந்து எலிசா ஒன்றும் வாங்க மாட்டான்! (2இரா.5:18, 3யோவான்.7-ஐ பார்க்கவும்).

இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்த கேயாசி, அவ்வளவு இலவசமாக நாகமான் கொடுத்ததை வேண்டாமென மறுத்திட எலிசா ஒரு சரியான முட்டாளாய் இருக்கவேண்டுமென நினைத்தான். அநேக இந்தியர்கள், இன்று மேல்நாட்டு கிறிஸ்தவர்கள் பின் ஓடுவதுபோல், அவன் நாகமான் பின்னே ஓடி, ஒரு சில பொய்களைச் சொல்லி ரூபாய் நாற்பதாயிரம் பெறுமான வெள்ளியையும், சீரிய நாட்டு ஆடம்பர உடை ஆகிய இரண்டையும் பெற்றுக்கொண்டான்!!

உடனே, ஞானதிருஷ்டி வரங்கொண்ட எலிசா (Gift of the word of knowledge), கேயாசின் பொருளாசையை வெளிப்படுத்துகிறான். நாகமானின் பணத்தை அபகரித்துக் கொண்டதால், கேயாசியை நாகமானுடைய குஷ்டமும் பிடிக்கும் எனக் கூறினான் (2இரா.5:27). எலிசாவின் அபிஷேகத்தைப் போல இருமடங்கு ஒருநாள் அடைவதற்குப் பதில், கேயாசி "குஷ்டரோகத்தைப்" பெற்றான்!

அந்த நாளில் தேவன் தன்னை பரீட்சிக்கிறார் என கேயாசி சிறிதும் உணரவில்லை. இதில் எவ்வளவு பெரிய விஷயம் அடங்கியிருக்கிறது என அவன் அறிந்திருப்பானேயாகில், அவன் வெகு ஜாக்கிரதையாக இருந்திருக்க முடியும். ஆனால் தேவன் நம்மை சோதிக்கும் வேளையில் நாம் பொதுவாக இதை உணருவதில்லை. விசேஷமாக இவ்வுலகத்துப் பொருட்கள் விஷயத்தில்!

எசேக்கியா இராஜாவைக்குறித்து ஒரு சமயம் "அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்" என்று எழுதப்பட்டிருக்கிறது (2நாளா.32:31). கேயாசியைக் குறித்துகூட இது உண்மையே! ஒருவரும் காணாத ஒரு சூழ்நிலையை தேவன் அவனுக்குக் கொடுத்தார். அவ்விதமாக மட்டுமே அவன் சோதிக்கப்பட முடியும். அன்று எரிகோவில் ஆகானுக்கு நேர்ந்த விதமும் அதுவே! ஒருவரும் காண முடியாத தனியான ஒரு வீட்டில் தேவன் விலக்கினதை ஆகான் எடுப்பானோவென தேவன் சோதித்தார்! அங்கு, ஆகான் தோற்றுப் போனான். கேயாசியும் தோற்றுப்போனான். தான் வீழ்ந்துபோன விதத்தை ஆகான் கூறுகையில் "நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக் கொண்டேன், (புதைத்து மறைத்தேன்)" என்று விவரிக்கும் "படிகள்" கேயாசியின் விஷயத்திலும் வருகிறது. ஆகானும் அவன் குடும்பத்தினரும் அதனால், கானான் தேசத்தில் தன் சுதந்திரத்தை அடையாமல் போயினர். கேயாசியும், தேவன் தனது மனதில் வைத்திருந்த அழைப்பை இழந்துபோனான்.

எலிசாவுக்கும், கேயாசிக்கும் இடையேயுள்ள வேறுபாடு துல்லிதமானது. எலிசா இருமடங்கு அபிஷேகத்தைப் பெற எலியாவைத் தொடரும்போது, கேயாசியோ ஒரு சொற்பமான அளவு செல்வத்திற்காக நாகமானைத் தொடருகிறான்!

இவர்கள் தற்காலத்தி லுள்ள இரண்டுவிதமான கிறிஸ்தவ ஊழியர்களின் பிரதிநிதிகளாகவே இருக்கிறார்கள். நம்மில் ஒவ்வொருவரும் இவ்விருவரில் யாரைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் அறிவோம்!

பிலேயாமின் கதையைப் பற்றி கேயாசி நன்கு அறிவான் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் பிலேயாமின் முடிவே தனக்கும்கூட உண்டு என அவன் ஒருபோதும் நினைத்ததில்லை. கர்த்தருடைய ஆவி தங்கியிருந்த தீர்க்கதரிசி பிலேயாம் (எண்.24:2,3) வழிதப்பிப்போனது

*பண விஷயத்தில்!! அநீதியாய் நடந்துகொண்டதினால் அல்ல! மாறாக, பணத்தை நேசித்தபடியால்!! பணத்தின் மேலும், மண்ணுக்குரிய ஒரு ராஜாவினால் கிடைக்கும் கனத்திலும் அவன் கொண்ட மோகம், தான் தேவசித்தத்திற்கு விரோதமாய் செல்வதைக்கூட காணக்கூடாதபடிக்கு பிலேயாமின் கண்களைக் குருடாக்கியது!*

*தேவன் அவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை காணும்படியே அவனை சோதித்தார்!!*

*ஆரம்பத்தில் பிலேயாம் தேவசித்தத்தை நாடினபோது, 'பாலாக்கு ராஜாவிடம் போகவேண்டாம்' எனத் தெளிவான பதிலை தேவன் அளித்திருந்தார். ஆனால் பாலாக்கு, அதிக பணத்தையும், மரியாதை யையும் அளித்தபோது பிலேயாம் இழுப்புண்டு, மீண்டுமாய் பாலாக்கிடம் செல்லும்படி தேவனிடம் அனுமதி கேட்டான். தேவன் அவனுடைய வேண்டுதலைத் தந்தருளி அவன் ஆத்துமாவிலோ இளைப்பை அனுப்பினார் (சங்.106:15). தான், இப்போது சோதிக்கப் பட்டதையும், பணமோகம் தன்னை வழிதவறப் பண்ணியதையும் அவன் உணரவில்லை! அவனோ தீர்க்கதரிசனம் சொல்லச் சென்றான். ஆனால் அது, உலக லாபத்தைத் தேடும் வழுகலான சருக்கு வழியில், கீழ்நோக்கி எடுத்துவைத்த முதல் படியாய் இருந்தது. அவன் அந்தச் சருக்கு வழியில், அடிமட்டத்திற்கு போய்சேர அதிக நேரம் பிடிக்கவில்லை. தேவனோடு நெருங்கிய ஐக்கியம் உள்ளவனென்று ஒருசமயம் அறியப்பட்டிருந்த அவன், ஒரு குறிசொல்லுகிறவன் என்று பெயர் பெற்று இஸ்ரவேலரால் வெட்டிக் கொல்லப்பட்டான் (யோசுவா.13:22).*

*கேயாசி அப்படிப்பட்ட எச்சரிப்பை தனக்காக எடுத்துக் கொள்ள வில்லை. அதேபோல பிலேயாம், கேயாசியின் உதாரணங்களை இன்று எச்சரிப்பாகக் கொண்டிருந்தும், இன்று அநேக கிறிஸ்தவர்கள் வழிதப்பிப் போகிறார்களே அவர்களை என்ன சொல்வது?*

*பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது. தேவன் நமது உண்மையையும் தேவ பக்தியையும்* **சோதிக்கும்படியே உலகப்பொருட்களை கவர்ச்சிகரமாகச் செய்திருக்கிறார்.** *தமது சீஷர்கள் உலகப்பொருட்களை தேடி நாடவேண்டும் என இயேசுகிறிஸ்து விரும்பவில்லை. நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அதன் நீதியையும் முதலாவது தேடும்படியே அழைக்கப்பட்டிருக்கிறோம். அப்பொழுது, நமது எல்லா உலகத் தேவைகளும் நிறைவாய் நம் மடியில் வந்து விழும்! நமது தேவைகளை மனிதரிடம் சொல்லி பிச்சை கேட்பதினாலோ, வேண்டுவதினாலோ அல்லது மறைவாக அறிவித்து உணர்த்துவத னாலோ நமது உலகத்தேவைகள் சந்திக்கப்படப் போவதில்லை! மாறாக, தேவனை மட்டுமே நம்புவதால் மாத்திரமே சந்திக்கப்படும்! கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதத்தினால் நமது உலகத்தேவைகள் எல்லாம் சந்திக்கப்பட்டிருக்கும்.அதனோடு எவ்விதமான வேதனையும் வராது (நீதி.10:22, பிலி.4:19). காதுள்ளவன் கேட்கக்கடவன்!*

# 9



## பேதுருவும் யூதாசும் சோதிக்கப்படுதல்

அந்த அறியப்படாத யோனாவின் குமாரனாகிய மீனவ சீமோனுக்கு தேவன் ஒரு பெரிய அழைப்பை வைத்திருந்தார். ஆனாலும் அவன் சோதிக்கப்பட்டா லொழிய அது நிறைவேற முடியாது!

பின்காலங்களில் பேதுரு என அழைக்கப்பட்ட சீமோனோ தேவனுடைய அற்புத திட்டத்தைப் பற்றி அறியாதவனாயிருந்தான். தேவன் தமது திட்டத்தைப் பற்றி அவ்வப்பொழுது ஒரு படி மட்டுமே வெளிச்சம் தருகிறார்!

ஒருநாள், இயேசுகிறிஸ்து பேதுருவின் படகில் ஏறி, படகை ஆழ்கடலுக்கு கொண்டு சென்று மீன் பிடிக்கும் படி வலையைப் போடச் சொன்னார். பேதுரு அப்படியே செய்தபோது, தன் வாழ்க்கையில் இதுவரை பிடித்திராத அளவு அதிகமான மீன்களைப் பிடித்தான் (லூக்கா.5:1-11). தற்கால கிறிஸ்தவ வியாபாரிகளைப் போல பேதுரு இருந்திருந்தால், "கர்த்தாவே இது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது. நீரும் நானும் பங்குதாரராய் இருக்கலாம். நீர் பிரசங்கம் செய்யும், நான் உம்மைப் பணம் கொடுத்து ஊழியத்தைத் தாங்குகிறேன்! என்னுடைய மீன் வியாபாரம் இப்படி பெருகுமானால் சீக்கிரம் இஸ்ரவேலிலேயே நான் பணக்கார வியாபாரியாக ஆகிவிடுவேன்!! மேலும் என்னுடைய தசமபாகம், உம்மை மட்டுமல்ல இந்த தேசத்தில் பல இடங்களில் இருக்கிற கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் உதவியாக இருக்கும்" என பலவாறு அவன் இயேசுவிடம் சொல்லியிருப்பான். மேலும் பேதுரு, உலகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று தனது சாட்சியை வியாபாரிகளுக்கான அநேக கூட்டங் களில் சொல்லி, வியாபாரத்தைச் செழிக்க வைக்கிற

கிறிஸ்துவிடம் வியாபாரிகளை இழுத்துக் கொள்ளலாம் எனவும் எண்ணியிருக்கக் கூடும். மாம்சத்திற்குரியவர்களின் யோசனை இப்படித் தான் இருக்கும்.

ஆனால், பேதுரு அப்படிச் செய்யவில்லை! தனது மீன் பிடிக்கிற தொழிலையே விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றினான். ஆம், அவன் **அந்தச் சோதனையில் வெற்றி பெற்றான்.** மிகுந்த பொருள் சம்பாதிக்க அனுகூலமாய், தங்கள் வழிகளை செழிப்பாக்குவதன் மூலம் தேவன் தங்களை சோதிக்கிறார் என்பதை, கிறிஸ்தவர்கள் கொஞ்சமும் உணர்வதில்லை. அநேகக் கிறிஸ்தவர்கள் இந்தச் சோதனையில் தோற்றுப்போகிறார்கள். அவர்கள் ஒருவேளை அப்போஸ்தலர்களாய் ஆகியிருந்திருக்கலாம். இதற்கு மாறாக, மாயையான 'கோடீஸ் வரர்களாய்' ஆகிவிடுகிறார்கள்!

*பல வருடங்களுக்குப் பிறகு பேதுரு, ஒரு பணக்கார வியாபாரியின் வங்கித் தொடர்பிற்கு வெகு தூரமாகி "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை" என்று சொல்ல முடிந்தது (அப்.3:6). ஆனால் அதைவிட மேலானதொன்று அவனிடமிருந்தது.*

கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திற்குரிய நித்திய செல்வத்தைப் பெறும்படி குப்பையான இவ்வுலகச் செல்வத்தை இழந்தான்!!

இயேசுகிறிஸ்துவை, தன்னுடைய வாழ்வில் பங்குதாரராக ஏற்றுக் கொள்வதின் மூலம் பணம் கொழித்து செழிப்பாக ஆவது பற்றிய கிறிஸ்தவப் புத்தகங்கள், கிறிஸ்தவ புத்தகக் கடைகளில், இப்பொழுதும் வெள்ளமென நிரம்பிவழிகின்றன! சொகுசு மாருதி கார்களும், விலையேறப் பெற்ற ஆடைகளும், வீடும், நிலமும் ஆகிய எல்லாம் கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தினால் சுதந்தரித்துக்கொள்ளும்படி, இன்று கிறிஸ்தவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இந்த எழுத்தாளர் களின் லௌகீக நோக்கத்தை எந்த சிறுகுழந்தையும்கூட கண்டு கொள்ள முடியும்! ஆனால் அநேக விசுவாசிகள் இன்று வஞ்சிக்கப்படுகின்றனர்!! அந்த புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள செல்வப்பொருட்களை பெற்றுக் கொண்டதற்கான சாட்சிகள் எல்லாம்கூட உண்மையாய் இருக்கட்டும். ஆனால் அவர்களில் எத்தனைபேர் **தேவன் தங்களை சோதிக்கிறார்** என உணர்ந்திருக்கின்றனர்? சோதிக்கப்பட்டு அவர்களில் அநேகம்பேர் பேதுருவைப் போலல்லாமல் தோற்றுப்போயினர்!!

சுயமே (Self) ஆதாம் புத்திரர் ஒவ்வொருவரின் மையமாக இருக்கிறது. மனந்திரும்பின பிறகும் 'சுயம் சாகாமல்' இப்போது தேவனையும் 'தன் சுயவிருப்பத்திற்கு' இணங்க வைக்கும்படி தந்திரமான முறையில் முயற்சிக்கிறது. இதுவே மாம்சபிரகாரமான இன்றைய கிறிஸ்தவத்திற்கு மூலாதாரமாயிருக்கிறது. "செல்வமும், சுகமுமான ஆசீர்வாதங்களை" தேவனிடத்திலிருந்து பெறுவதற்கே "விசுவாசம் தேவை" என போதித்து, அதை.... இந்தக் காலங்களில் புத்தகமாக, **மாம்ச**

**சிந்தையுள்ள கிறிஸ்தவம்** ஏராளமாய் வெளியீடு செய்துள்ளது. இருப்பினும், இப்புத்தகங்களும்கூட தேவனுடைய நோக்கத்தை நிறை வேற்றுகின்றன - அதாவது, மெய்யாகவே நம்முடைய இருதயம் எதை விரும்புகிறது? பூமிக்குரியதையா? அல்லது பரத்திற்குரியதையா? என வெளிப்படுத்தி காண்பிக்கிறது. இப்படியாக, கோதுமையும் பதரும் சலிக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது!

யூதாஸ்காரியோத்து, இயேசு தெரிந்தெடுத்த பன்னிரண்டு அப்போஸ்தலருள் ஒருவன்! 'தேவனால் அங்கீகரிக்கப்பட்டவன்' என்ற நற்சான்றிதழை மற்றவர்களைப்போலவே அவனும் பெறத் தகுதி யுள்ளவனாக நல்ல வாய்ப்பு இருந்தது. ஆனால் மற்றவர்களைப்போல, அவனும் சோதிக்கப்பட வேண்டியிருந்தது. பொருளாளராக அவன் இருந்தான். அந்நிலையில் உண்மையுள்ளவனாயிருக்க மிகுந்த வாய்ப்பு அவனுக்கு இருந்தது. தாராளமாக, புதிய ஏற்பாட்டு நிருபங்களில் அவனும் சிலவற்றை எழுதியிருக்க முடியும். அவனுடைய பெயர் புதிய எருசலேமின் அஸ்திபாரக்கற்களில் நிச்சயமாய் இருந்திருக்கவும் முடியும் (வெளி. 21:14). ஆனால் அவன் தோற்றுவிட்டான்!

பணப்பையின் உபயோகங்களிலொன்று தரித்திரருக்கும், தேவை யுள்ளவர்களுக்கும் கொடுப்பதற்காகவே! (யோவான் 13:29). இந்த சேவையில் யூதாஸ் விருப்பம் உள்ளவனாக காண்பித்தான். ஆனால் உண்மையில் தரித்திரருக்காக கொடுக்கப்பட்டதை அவன் திருடினான் (யோவான்.12:4-6). 'இயேசு கிறிஸ்து ஏன் யூதாசை நேரடியாக பகிரங்கப் படுத்தவில்லை?' என்ற இந்த கேள்வியை நாம் கேட்கலாம். அந்த கேள்விக்கு இணையாக வேறொரு கேள்வியை நாம் இப்போது கேட்க முடியும். 'இன்று கிறிஸ்தவத்தின் பெயரால் தனக்காகப் பணம் சம்பாதிப்போர் எல்லோரையும் இயேசு ஏன் பகிரங்கப்படுத்தக் கூடாது?' இன்றைக்கும்கூட பணத்திற்காக தேவனுக்கு ஊழியம் செய்யும் பெருங்கூட்டம் உண்டு.

மேலும் தேவ ஊழியத்திற்காக கொடுக்கப்படும் பணத்தில் 100% உத்தமமாயிராதோர் உண்டு. ஆனால் தேவனோ பொறுமையாய் இருக்கிறார். ஒவ்வொருவரும் சோதிக்கப்படும்படி அவர் அவகாசம் கொடுக்கிறார்!

பணத்தை தெரிந்துகொண்டதினால், எதை இழந்துவிட்டான் என்று மட்டும் யூதாஸ் அறிந்திருப்பானானால்....! அப்படியே, தற்கால கிறிஸ்தவ ஊழியர்களும் பணத்தை தெரிந்துகொள்வதினால் எதை அவர்கள் இழக்கிறார்கள் என்று மட்டும் அறிந்திருப்பார்களானால்...! எவ்வளவு நலமாயிருக்கும்?

யூதாசின் பிரச்சனை என்னவென்றால் அவன் **பெற்றுக்கொள்வதை விரும்பி, கொடுப்பதை வெறுத்தான்.** இயேசுகிறிஸ்து தன் சீஷர்களுக்கு, வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே பாக்கியம் என்றே போதித்திருந்தார் (அப்.20:35). பேதுரு அதைப் புரிந்துகொண்டான். ஆனால்,

*யூதாஸ் அதைப் புரிந்துகொள்ளவில்லை. "மேலும் மேலும்" பெற்றுக் கொள்வதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது என யூதாஸ் எண்ணினான்!*

*ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த இரண்டு பகுதியினருக்குள், ஏதாவதொன்றில் அடங்குவான். ஒன்று, பேதுருவைப் போல எல்லா வற்றையும் வெறுத்து தேவனுக்கும், தேவையுள்ள பிறருக்கும் கொடுக்க விரும்புகிறவர்கள்! அல்லது யூதாசைப் போல பெற்றுக்கொள்ளவும், தங்களுக்கென சேர்த்து வைத்துக்கொள்ளவும் விரும்புகிறவர்கள்!! இந்த 'யூதாசுகள்' அப்படியே கொடுத்தாலும் பாரப்படுத்துகிற தங்கள் மனசாட்சியை இலகுவாக்குகிறதற்காக ஒரு கருமித்தனமான முறையில் கொடுக்கிறதாகவே இருக்கும் - அதுவும், வாரக்கணக்கில் ஜெபம் செய்த பின்பு!! ஆனால் அவர்கள் இனாமாகப் பெறுகிற வேளையில் ஜெபிக்கிறவர்களாக காணப்படுவதில்லை. நாம் பெற்றுக்கொள் வதிலும், கொடுப்பதிலும் தேவன் நம்மைச் சோதித்து, நாம் இவ்வுலக ரீதியின்படி பிழைக்கிறோமா? அல்லது அவரது இராஜ்ஜியத்தின் ரீதியின்படி பிழைக்கிறோமா? என்று காண்கிறார்.*

> *நாம் தேவனால் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், நமது மாம்சத்தில் வாசமாயிருக்கிற 'இலவசமாய்' பெறும் இச்சையை வைராக்கியமாக சிலுவையில் அறைய வேண்டும்!*

*நம் பழைய பழக்கங்களை மறக்கவும், பதிலாக புதியவைகளைக் கற்றுக் கொள்ளவும் வேண்டும். முந்தின காலங்களில் இனாமாக பெறுவதில் நாம் எவ்வளவு கைதேர்ந்தவர்களாயிருந்தோமோ, அவ்வளவாக நாம் இப்போது கொடுப்பதில் கைதேர்ந்தவர்களாக வேண்டும்! ஆனால் ஒரு இரவிலேயே, எதிலும் திறமையுள்ளவர்களாக மாறிட நாம் எதிர்பார்க்க முடியாது. இடைவிடாமல் பழகுவதினாலேயே, நாம் எதிலும் திறம்படைத்தவர்களாகிறோம். நாம் கொடுக்கவே கற்றுக்கொள்ள ஆரம்பிக்க வேண்டும். இந்தக் காரியத்தில் நமது சுபாவம் முற்றிலும் மறுரூபப்படும்வரை நாம் அதில் கற்றுத் தேற வேண்டும். கிறிஸ்துவின் மெய்யான சீஷன் தேவனிடத்தில் ஐசுவரியவானாய் இருக்கவும், மற்றவர்களுக்கு கொடுக்கவும் கற்றுக்கொண்டவன்! தனக்குத் தேவை உண்டாகும் போதோ, தான் பிறருக்கு கொடுத்த அந்த அளவை வைத்தே தேவன் தனக்குத் திரும்பக் கொடுப்பதைக் காண்பான்!!*

*யூதாஸ்காரியோத்தில் இயேசுகிறிஸ்துவின் வசனம் நிறைவேறியது. "அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிரா விட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" (லூக்கா 16:11). தேவன் அவனிடம் பணப்பையை கொடுத்து பரீட்சைக்கான தவணை கொடுத்தார்.... அவன் தோற்றுப் போனான்! அவனுடைய இழப்பு நித்தியமானது!! இன்று உங்களுக்கும் எனக்கும் பரீட்சைக்கான தவணை கொடுக்கப்பட்டிருக்கிறதே!!*

# 10



## தேவ அங்கீகாரம் பெற்ற மீதியானவர்கள்

*வெளிப்படுத்தின விசேஷம் 14-ம் அதிகாரம், 1 முதல் 5 வசனங்களில், தங்கள் உலக வாழ்வில் கர்த்தரை முழு இருதயத்துடன் பின்பற்றின சீஷர்களின் சிறு கூட்டத்தைப் பற்றி படிக்கிறோம். கடைசி நாளில் இவர்களே ஜெயங்கொண்டவர்களாய் இயேசுவுடன் நிற்கிறார்கள்! தேவன் தன்னுடைய முழு நோக்கத்தையும் அவர்களில் நிறைவேற்ற முடிந்தது!!*

*பாவமன்னிப்பு பெற்றவர்களின் பெருந்திரளோ ஒருவரும் எண்ணக்கூடாததாய் இருந்தது (வெளி.7:9,10ல் சொல்லப்பட்டிருக்கிறது). ஆனால் இந்த சீஷர்களின் கூட்டமோ அதைவிட பன்மடங்கு சிறிய ஒன்றேயாகும்! இதை எண்ணிவிட முடியும்!*

*பூமியின்மேல் தேவனுக்கு உண்மையும் செம்மையுமாய் இருந்த* **மீதியானவர்கள்** *இவர்களே. இவர்களே சோதிக்கப்பட்டு தேவனுடைய நற்சான்றிதழைப் பெற அங்கீகாரம் பெற்றவர்கள்! இவர்களைக் குறித்து தேவனே, "தங்களை கறைப்படுத்தாதவர்கள்...., ஆட்டுக்குட்டியானவர் எங்கு சென்றாலும் பின்பற்றுகிறவர்கள் ...., இவர்கள் வாயிலே கபடம் காணப்படவில்லை...., மாசில்லாதவர்கள்" என்று நற்சான்று வழங்குகின்றார்!! (வெளி. 14:4,5).*

*இவர்களே தேவனுக்கு முதற்பலனானவர்கள்! இவர்களே கிறிஸ்துவின் மணவாட்டியும் ஆவர்! ஆட்டுக்குட்டியானவரின் கலியாண நாளிலே (வெளி.19:7), சிறிதும் பெரிதுமான எல்லாக் காரியத்திலும் இவர்கள் தேவனுக்கு முற்றிலும் செம்மையும் உண்மையுமாய் இருந்தது தகும் என்பது,* **அன்று** *ஒவ்வொருவருக்கும் தெளிவாகும்.*

*தங்களுக்கானதைத் தேடி உலக லாபத்தை தேடுபவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதையும் அந்த நாளில்தான் முழுவதும் உணருவார்கள். தங்களுடைய தகப்பனையோ, தாயையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, சகோதரர்களையோ, சகோதரி களையோ கர்த்தரைக் காட்டிலும் அதிகமாய் நேசிப்பவர்கள் அந்த நாளில் தங்கள் நித்திய இழப்பை கண்டுகொள்வர்!*

*அந்த நாளில், இயேசுவின் கட்டளைகளுக்குப் பூரணமாய் கீழ்ப்படிந்து, அவர் நடந்ததுபோலவே தாங்களும் நடக்க முழுமனதுடன் தேடினோரே..... பூமியின்மேல் மிகவும் ஞானமுள்ளவர்கள் என்பதும் வெளிப்படும்!*

*கிறிஸ்தவத்தின் போலி மரியாதைகள் மெய்யாகவே குப்பைகள் தான் எனவும் அந்த நாளில் தெளிவாய் காணப்படும்!!*

*ஓ.... , அந்தநாளில் நாம் காணப்போகும் நிதரிசனமான சிலவற்றை* **இப்போதே** *தெளிவாகக் காணும்படி நமது கண்கள் திறக்கப்படட்டும்!*

*ஒரு மனுஷன் எக்காலத்தும் அடையக்கூடிய மிகப்பெருங் கௌரவம்,* **தேவனாலே சோதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவனாகி,** *கிறிஸ்துவின் மணவாட்டியாகப் பங்கடைவதேயாகும்! காதுள்ளவன் கேட்கக்கடவன்!! ஆமென்.*